விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 26 வியாழக்கிழமை (11.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பலம் பொருந்திய நாடுகள் இலங்கை மீது அழுத்தம் !

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(ஜெனிவா) பலம் பொருந்திய நாடுகள் தன்னிச்சையாக செயற்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. சிறிய மற்றும் பொருளாதார ரீதியில் பலவீனமான நாடுகள் மீது பலம் பொருந்திய நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக இலங்கைப் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அறிவித்துள்ளனர். 19 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்க் கூட்டமைப்புடன் பேசுவதால் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது !

### மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்ற தெரிவு குழுவிற்கு அழைப்பதினாலேயோ அல்லது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாலேயோ தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதில்லை.

அரசாங்கம் முதலில் தனது தீர்வுத திட்டத்தை முன்வைக்க வேண்டும். அந்த தீர்வுத் திட்டத்தின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெறல் வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடி பேச்சுவார்த்தைக்கு அரசு தயாரில்லை என்று கூறிய கருத்திற்கு பதில் கூறும் விதத்திலேயே மக்கள் விடுதலை முன்னணி இந்த கருத்தை அதன் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் மூலமாக வெளியிட்டுள்ளது.

முதலில் அரசு தீர்வுத் திட்டத்தை முன் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கபாட்டை ஏற்படுத்திய பின் தெரிவுக்குழுவில் பங்கேற்கலாம்.

அரசே முதலில் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அதை விடுத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பாராளுமன்ற தெரிவிற் குழுவிற்கு பங் 19 ஆம் பக்கம் பார்க்க....

## ஒரே இரவில் 10 கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு !

### கிளிநொச்சியில் சம்பவம்




(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்று அதிகாலை புடைவைக் கடைகள மற்றும் அழகுசாதனக் கடைகள் அமைக்கப்பட்ட பகுதியிலிருந்த 10 கடைகள் உடைக்கப்பட்ட அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள் 19 ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் சுதந்திரத்தில் இராணுவத் தலையீடு கூடாது

### முதலமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பு எனக் கூறிக் கொண்டு எமது சுதந்திரத்தில் இராணுவம் தலையிடக் கூடாது என வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த 19 ஆம் பக்கம் பார்க்க....

## ராஜீவ்காந்தி கொலை கட்டவிழும் மர்மங்கள்

7 ஆம் பக்கம் பார்க்க

## சிங்களவரின்றி தீர்வு இல்லை

(கொழும்பு)

சிங்கள மக்களின் ஆதரவில்லாமல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ள வேண்டும் என சமூக ஒருமைப்பாட்டு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். 20 ஆம் பக்கம் பார்க்க....

## நிதிச்சட்ட மூலம் 3-வது முறை ஆளுநருக்கு அனுப்பிவைப்பு !

### வடக்கு மாகாண சபையினால்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் நிதி நியதிச்சட்டம் மூன்றாவது முறையாகவும் ஆளுநர் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் திருத்தங்களுடனும் சபையின் அங்கீகாரத்துடனும் நேற்றையதினம் ஆளுநரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கபட்டது.

வடக்கு மாகாண சபையின் 15 ஆவது அமர்வு நேற்று நடை பெற்றது. இதன்போது நிதிநியதிச் சட்டத்தல் ஆளுநரினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த இருதடவையும் ஆளுநருக்கு இவ் நியதிச்சட்டம் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட போதும் ஆளுநர் தவறுகளைச் சுட்டிக்காட்டி அதனை அங்கீகரிக்க மறுத்த நிலையில் மீண்டும மூன்றாவது தடவையாக அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## பேச்சுவார்த்தைக்கு வருமாறு கோத்தபாய அழைக்கவில்லை.

### முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தன்னுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தன்னை அழைக்கவில்லையென வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை கட்டட தொகுதியில நேற்று இடம்பெற்றது.

அமர்வு முடிவடைந்து வெளியில் வந்த முதலமைச்சரிடம் கோத்தபாய ராஜபக்ஷ உங்களை சந்திப்பதற்கு மேல் மாகாண சபை உறுப்பினரான மனோ கணேசன் ஊடாக தூது விடப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியிருந்ததே. அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன? என ஊடகவியலாளர்கள் வினவினர்.

அதற்கு பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் 19 ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலைக்கு இம் முறை 24 ஆயிரம் பேர்


(கொழும்பு)

2013/2014 ஆம் பல்கலைக்கழக கல்வியாண்டில் இம்முறை 24,540 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்த கல்வி ஆண்டில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை விரட்டுவோம் - ரணில்


(கொழும்பு)

மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் நடவடிக்கைக ளினால் விவசாயிகள், இளைஞர் யுவதிகள், மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என சமூகத்தின் பல்வேறு மட்டத்தைச் சேர்ந்த வர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரு கின்றனர்.

இலங்கையின் அடையாளத்தை உறுதி செய்து அனைத்து இன மக்களையும் சமமாக நடத்தும் ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே உண்டு.

ராஜபக்ஷ விரோத சக்திகளை ஒன்று திர ட்டி ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டியடிப் போம்.

புதிய அரசாங்கமொன்றின் கீழ் மக்களு க்கு நன்மைகளை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் வைத்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை நேற்று முன்தினம் பெற் றுக் கொண்டார்.

அதன்போதே ரணில் விக்ரமசிங்க இந் தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (எ-11)


## வீடு வாடகைக்கு, குத்தகைக்கு

யாழ்.நகர மத்திய பகுதியில் சகல வசதி களுடன் கூடிய வீடு வாடகை, குத்தகை க்கு உண்டு. நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். —— தொடர்புக்கு :

0778186460

(7759)



## SPEED
PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)

விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-8284)


# கண்ணீர் அஞ்சலி



## செ.மாணிக்கவாசகர்

எமது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி கௌரவ மா.கணேசராஜா அவர்களின் தந்தையாகிய செ.மாணிக்கவாசகர் அவர்கள் இறைபதம் எய்தியதை யிட்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் நீதிபதி அவர்களிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாவட்ட நீதிமன்றம்,
முல்லைத்தீவு. (சி-8478) - சட்டத்தரணிகள் சங்கம்

# கண்ணீர் அஞ்சலி

## செ.மாணிக்கவாசகர்



எமது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி கௌரவ மா.கணேசராஜா அவர்களின் தந்தையாகிய செ.மாணிக்கவாசகர் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் நீதிபதி அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை பொரளையில் நடைபெறும் (C-8479)

பதிவாளர், உத்தியோகத்தர்கள் மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 14-04-1932
உதிர்வு 12-08-2014


## அமரர் விசாலாட்சி சுந்தரமூர்த்தி

12.08.2014 அன்று அமரத்துவமடைந்த எமது அன்னை திருமதி விசாலாட்சி - சுந்தர மூர்த்தி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் இருந்து உதவிய உற்றார், உற வினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசிகள், இணையத்தளங்கள் மூலமும் அஞ்சலிப் பாக்கள் அனுப்பியும், மலர்வளையங்கள் வைத்தும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த உறவுகளுக்கும் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

117, ஜி.பி.எஸ் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 0214590230 (7758)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# தசாக கிருஹயக்ஞ (வீட்டுக்கிருத்திய) அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் ஜய வருடம் ஆவணி மாதம் 19-ம் நாள் (04.09.2014) வியாழக்கிழமை தசமித் திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர்
## ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா

அவர்களின் தசாஹாதி ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| 13.09.2014 | சனிக்கிழமை | – தசாகம் |
| 14.09.2014 | ஞாயிற்றுக்கிழமை | – ஏகோதிஷ்டம் – மாசிகம் |
| 15.09.2014 | திங்கட்கிழமை | – சபிண்டீகரணம் |
| 16.09.2014 | செவ்வாய்க்கிழமை | – கிருஹயக்ஞம் |

மேற்படி எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் 16.09.2014 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சமாராதனையில் (மதிய போசனம்) கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அழைக்கிறோம்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (7757)

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

## யாழ்.மாவட்ட அனைத்து திருச்சபை தலைவர்கள் மற்றும் சபை மக்கள் இணைந்து நடாத்தும்

## நிலையான சமாதானத்திற்கான ஐக்கிய ஜெப பெருவிழா-2014

திகதி:13.09.2014 (சனிக்கிழமை)
நேரம்:பி.ப 4.30
இடம்: சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சி-8481)

அனுமதி இலவசம்

உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சார்ய அபிஷேக வாழ்த்து
(குரு பட்டாபிஷேகம்)



இன்று ஆச்சார்ய அபிஷேகம்
மேற்கொண்டு
விசேட தீட்சை பெற்று குருவாக உயர்ந்துள்ள
தும்பளை நெல்லண்டையைச் சேர்ந்த
கற்கோவளம் ஸ்ரீ தும்பி முருகன் தேவஸ்தான
பிரதம குரு சிவ ஸ்ரீ சோமஸ்கந்தராஜா தனஞ்சயன்
குரு அவர்கள் குருவருளும் இறையருளும் பெற்று
மென்மேலும் சிறப்படைய
வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ தும்பி முருகன் அடியார்கள்
சர்வானந்தம் குடும்பம்

கற்கோவளம். (சி-8472)


## மாற்றுவலுவுடையோருக்கான கலை, இலக்கிய போட்டி

(கரணவாய்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் கரவெட்டி பிரதேச செயலகம் இணைந்து மாற்றுவலுவுடையோர் தொடர்பாக கலை இலக்கியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப் போட்டி மாற்றுவலுவுடைய அனைத்து வயதினரும் குறிப்பாக பிறப்பின் போதே மாற்றுவலுவுடையவராக பிறந்தவர்கள் விபத்து, யுத்தம் என்பவற்றினால் ஊனமுற்றிருப்போர் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

இவர்களுக்கான போட்டிகளாக நடனப்போட்டி, இசைக்கருவி இசைத்தல், பாட்டுப் போட்டி, சித்திரப் போட்டி, நாடகப் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

எனவே இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ-60)


CIMA
Chartered Institute of Management Accountants
@
Wisdom
021 2220727 | 021 7200777


# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை வட்டாரம் 05
ஆதன இலக்கம் 65/17 (புதிய பதிவு) குளப்பிட்டி வீதி

வட்டாரம் 05, குளப்பிட்டி வீதி, ஆதன இலக்கம் 65/17 ( புதிய பதிவு) இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவில் பற்று, ஆனைக்கோட்டை, இறை *குருந்தன் வளவு* என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 கொண்ட இவ் வாதனமானது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பரராசசிங்கம் பெண் ரஜனி அவர்களால் அறுதி உறுதி மூலம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ருக்மணி காந்தன் பெண் நகுலேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 879 ஆம் இலக்க 2012.10.18 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். குருந்தன் வளவு நிலப்பரப்பு 03 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதுவிடத்து இவ் வாதனம் ருக்குமணி காந்தன் பெண் நகுலேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்

(7751)

# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்,ஆனைக்கோட்டை, வட்டாரம்:-5,
ஆதன இலக்கம்:-65/19(புதிய பதிவு) குளப்பிட்டி வீதி

வட்டாரம் 05,குளப்பிட்டி வீதி,ஆதன இலக்கம் 65/19 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குபகுதி மானிப்பாய் கோவில்பற்று, ஆனைக்கோட்டை இறை **முத்தார் பருத்தியும் மறுபிரிவும்** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 14.95 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களும் தற்பொழுது அமெரிக்காவில் வசிப்பவர்களுமான வேலாயுதப்பிள்ளை கைம் பெண் விஜயலட்சுமி அவர்களால் அறுதி உறுதி மூலம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ருக்குமணி காந்தன் பெண் நகுலேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 2872 ஆம் இலக்க 2011.08.27 ஆம் திகதி அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். **முத்தார் பருத்தியும் மறுபிரிவும்** நிலப்பரப்பு 02 குளி 14.95 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ருக்மணி காந்தன் பெண் நகுலேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். (7752)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

# மரண அறிவித்தல்

## திருமதி வீரவாகு செல்வநேசன் (சீனியம்மா)



கரவெட்டி மத்தி பெரியதோட்டம் ஆசையம்மா வீட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரவாகு செல்வநேசம் (சீனியம்மா) அவர்கள் 09.09.2014 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு கனகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ் சென்ற சிற்றம்பலம் வீரவாகு (அப்போதிக்கரி) அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ் சென்ற கந்தப்பு செல்வராசாவின் அன்புச் சகோதரியும் திருமதி இ. மங்களாம்பிகை, திருமதி த.புஸ்பலலிதா, திருமதி வி.லவணியகுமாரி (கனடா), திருமதி ஸ்ரீ.தயாநிதி (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வி வீ.மல்லிகா, திருமதி ப.வாசுகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ச.இராசகோபால், சி.தவராசா, ச.விநாயகமூர்த்தி (கனடா), க.ஸ்ரீகருணா (சுவிஸ்), க.பரமானந்தம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி ச. சொரூபா (லண்டன்) , த.திவாகர் (கனடா), செல்விகள் வி.தனுசியா, வி.சுமதிகா ( கனடா), செல்வன் ஸ்ரீ ஸ்ரீசுதன் (சுவிஸ்), செல்வர்கள் ப.யனோசிதன், ப.கோமகன், ப.கோகிலன் (கனடா), சி.சந்திரமோகன் (லண்டன்), திருமதி தி.தாட்சாயினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வன் ச.மிதுலன், செல்வி ச.ஆதியா (லண்டன்), செல்விகள், தி.ஜெனிசா, தி.ரக்ஷனா (கனடா), ஆகியோரின் அன்புப் பூட்டியும், திருமதி தா.தனலட்சுமி, திருமதி சி. ஈஸ்வரி, திருமதி சி.சரஸ்வதி, செல்வி சி.சிவகாமதேவி, காலஞ்சென்ற சி.கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.09.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியதோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(சி-8473)

தகவல்:-
குடும்பத்தினர்

# இராசி பலன்

**11.09.2014**

ஆவணி 26, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திருதியை பின்னிரவு 2.25 மணிவரை
ரேவதி பின்னிரவு 1.31 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
சித்தமிர்தம்

வளவன்

**மேடம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கை கூடுவதற்காக வாய்ப்புண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், சுட்டட பணிகளை தொடர்வீர்கள்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, மறதியால் விட்டுப்போன காரியங்களை செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** சுப செய்திகள் வந்து சேரும் நாள், நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்:** சொல்லைச் செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**தனுசு:** பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சகோதர வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பெண் வழி பிரச்சினைகள் சுமுகமாக முடியும், பயணங்களால் பலனுண்டு, பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தவிர்த்துக் கொள்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கௌரவமான நாள்.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட் டுப் பெறுவீர்கள், குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைப்பது நல்லது. கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்களை கண்காணிக்கும் பணியில் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள்

(சென்னை)

சென்னையிலிருந்து வெளி வரும சில ஆங்கில மற்றும் தமிழ் நாளிதழ்களின் செய்தியாளர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்பாக சில மூத்த பொலிஸ் அதிகாரிகளை சென்னை நகர பொலிஸ் நியமித்திருப்பதாகக் கூறும் சுற்றறிக்கை ஊடகங்களில் வெளியாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையில் நான்கு ஆங்கில நாளிதழ்கள், ஏழு தமிழ் நாளிதழ்களின் 26 செய்தியாளர்களுக்கும் பொறுப்பாக துணை ஆணையர், உதவி ஆணையர் மட்டத்தில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரதி நேற்று பகிரங்கப்படுத்தப்பட்ட நிலையில், இது தொடர்பாக சென்னையிலிருக்கும் பத்திரிகையாளர் சங்கங்கள் தங்கள் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன.

இந்தச் சுற்றறிக்கையை பகிரங்கப்படுத்திய சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவரான அன்பழகன், இது தொடர்பாக இந்திய பிரஸ் கவுன்சிலிடம் புகார் தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

சென்னை பிரஸ் கிளப்பும் இதைக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக பிபிசி தமிழோசையிடம் பேசிய பாரதி தமிழன், இது பத்திரிகையாளர்களை மிரட்டும் செயல. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டார்.

அதிகாரிகள் கவனித்துக்கொள்ள வேண்டிய பத்திரிகையாளர்களின் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் செய்தியாளரான முத்தலீப், குற்றங்களைக் குறைக்க வேண்டிய பொலிஸ், குற்றங்களை மறைப்பதற்காக இத்தகைய செயல்களில் ஈடுபடு வதாகவும் இதனால், பொலிஸாருக்கும் செய்தியாளர்களுக்கும் இடையிலான மோதல் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

**அரசியல் கட்சிகள் கண்டனம்**

காங்கிரஸ், பாரதீய ஜனதாக் கட்சி, தி.மு.க. போன்ற கட்சிகள் இது தொடர்பாக கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. இது குறித்து பிபிசி தமிழோசையிடம் பேசிய தி.மு.கவின் அமைப்புச் செயலர் டி.கே.எஸ். இளங்கோவன், பத்திரிகையாளர்களைக் கண்காணிப்பதற்கான சென்னைப் பொலிஸாரின் இத்தகைய முயற்சி, அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், சென்னை நகர பொலிஸ் இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், பொலிஸ் மக்கள் தொடர்பு அதிகாரி ஓய்வு பெற்றதையடுத்து, புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் சில ஊடகங்களில் வெளியானதைப் போல எவ்வித சுற்றறிக்கையும் பிறப்பிக்கவில்லை என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட மூன்றாம் வருட மாணவர்களின் மக்கள் தொடர்பாடல் பாடத்திற்காக குழு-9 மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட தரம் 10,11 மாணவர்களுக்கான தொடர்பாடல் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நெல்லியடி New Excellent Insititutue கல்வி நிறுவனத்தில் 24.08.2014 அன்று நடைபெற்றது. இக் கருத்தரங்கில் 60 மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து சிறப்பித்தனர்.

# நினைவு நாளும் பேருரையும்

கலாநிதி அன்னலட்சுமி சின்னதம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள செல்லா மண்டபத்தில் (வாழ்வகம்) இன்று 11 ஆம் திகதி காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை வாழ்வகத்தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் திருமதி.யசோதா உதயகுமார், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B1 ஆளுநர் லயன். வை. தியாகராஜா, ஞானம் பவுண்டேசன் கனக சிங்கம் நவநீதன், தெல்லிப்பழை வைத்திய அதிகாரி மகேந்திரன் சுரேந்திரன், வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பிராந்திய முகாமையாளர் றோய் நிக்கலஸ் மற்றும் சுன்னாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எல்.துஸ்மந்த ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் சித்த மருத்துவபீட முதுநிலை விரிவுரையாளர் திருமதி.திலகேஸ்வரி குமுதரஞ்சன் நினைவுப் பேருரையினை வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வாழ்வக மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பொதுச் சபைக் கூட்டம்

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத்தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கு பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்கும் படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

# ஊவாவில் பாதுகாப்பை பலப்படுத்துங்கள்- ரணில்

(கொழும்பு)

ஊவா மாகாண தேர்தலின் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை சர்வதேச ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு நடத்தப்படவுள்ளது.

இந்தநிலையிலேயே ஊவாவில் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. எனவே அங்கு பாதுகாப்பை பலப்படுத்துமாறு ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதில் வழங்கும் வகையில கருத்துரைத்துள்ள அமைச்சர் தினேஸ குணவர்த்தன, ஊவாவில் அரசாங்கத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தனஞ்சயன் குருக்கள் அவர்களின்

# குருப்பட்டாபிஷேக நிகழ்வு

காலம்:- இன்று 2014.09.11 வியாழக்கிழமை

இடம் :- அருள்மிகு வீரபத்திர பத்திரகாளி தேவஸ்தானம் கரவெட்டி கிழக்கு, தல்லையப்புலம்.



## நிகழ்ச்சி நிரல்

✦ காலை 7.35 – 9.03 வரை ஆச்சார்யாபிஷேகம்

✦ பிரதம சிவாச்சாரியார் வாழ்த்தும் ஆசீர்வாதமும்
வழங்குபவர் :- சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர். (J.P)
(வல்வை முத்து மாரியம்மன் தேவஸ்தானம்)

✦ நிகழ்வின் ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்தும் ஆசியும் :-
சிவஸ்ரீ. கந்தசோமசுந்தரக்குருக்கள் (J.P) அவர்கள்
(ஓய்வு நிலை அதிபர்)

✦ ஆசியுரைகள்
01.சிவஸ்ரீ சதாசிவ மகாலிங்க சிவக்குருக்கள்(J.P)
(அதிபர், சைவக்குருக்கள், குருகுலம்)
02.சிவஸ்ரீ.இ.பாலகிஷ்ணக்குருக்கள் அவர்கள்
03.சிவஸ்ரீ.கேதீஸ்வரக்குருக்கள் அவர்கள்
04.சிவஸ்ரீ.பா.பாலமனோண்குருக்கள் அவர்கள்
05.சிவஸ்ரீ.சு.ஸ்ரீரங்கநாதக்குருக்கள் அவர்கள்
06.சிவஸ்ரீ.இ.குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்

✦ வாழ்த்துரைகள்
01.ஸ்ரீமான்.சிவபாதம் நந்தகுமார் அவர்கள்
(வலயக்கல்விப் பணிப்பாளர் வடமராட்சி)
02.ஸ்ரீமான். கணேசு (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்கள்
(பரிபாலனசபைத் தலைவர் தல்லையப்புலம் வீரபத்திர பத்திரகாளி தேவஸ்தானம்)
03.ஸ்ரீமான். கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை அதிபர்)
(மேற்படி ஆலயப் பொருளாளர்)

✦ நன்றியுரை:-
சிவஸ்ரீ. தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்கள்
(பிரதியதிபர் அம்பன் அ.மி.த.க பாடசாலை) தொ.பே: 0776202716
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தான ஆதீனகர்த்தா.

இங்ஙனம் :
கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம்
அருள்மிகு வீரபத்திர பத்திரகாளி பரிபாலன சபையினரும், ஊர்ப்பொதுமக்களும்.

(சீ-8480) சுபமஸ்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஐ.நா.ஆணையாளரும் பயங்கரவாதத்திற்கு துணை

## பொதுபல சேனா சீற்றம்

(கொழும்பு)

தமிழ் பயங்கரவாதத்திற்கு அப்பால் முஸ்லிம் கிறிஸ்தவ பயங்கரவாத செயற்பாடுகளையும் நியாயப்படுத்தவே ஐ.நாவின் புதிய ஆணையாளர் செய்யித் அல் - ஹுசைன் முயற்சிக்கின்றார். இலங்கையில் நடந்து முடிந்த பழைய விடயங்களை மீண்டும் கிளறிவிட்டு நாட்டை சீரழிக்க வேண்டாம் என பொதுபலசேனா பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபலசேனா அமைப்பினர் நேற்று முன்தினம் கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவ் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் டிலந்த விதானகே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

**ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமிழ் பயங்கரவாத செயற்பாடுகளை ஆதரித்து தனது கடமையினை செய்து முடித்தார். இப்போது புதிய ஆணையாளராக பதவி யேற்றுள்ள செய்யத் அல் - ஹுசைன் தமிழ் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ பயங்கரவாத செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையில் தனது பணியினை ஆரம்பித்துள்ளார்.**

இலங்கையில் பயங்கரவாதமொன்றினை அழித்தமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை பேசிக் கொண்டிருக்கின்றது. ஆனால், இன்று சிரியாவிலும் இஸ்ரேல், பாலஸ்தீன பகுதிகளில் பொது மக்களை இனப்படுகொலை செய்யும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகவும் பெண்களையும் கர்ப்பிணிகளையும் கொலை செய்து உலகில் இஸ்லாமிய பயங்கரவாதத்தை பரப்பும் ஆயுதப் போராளிகளுக்கு எதிராகவும் ஆணையாளரின் வாய் திறக்காதுள்ளது.

மேலும், புரூனையில் பௌத்தர்களை கொன்று இஸ்லாமிய நாடாக்கும் முயற்சியில் முஸ்லிம் பயங்கரவாதிகள் செயற்படுகின்றனர். இஸ்லாமியரல்லாத ஏனைய மத பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றனர். இவை மனிதவுரிமை மீறல்களாக ஏன் இவ்வமைப்புகளுக்கு தெரியவில்லை.

இலங்கையில் இடம்பெற்று முடிந்த பழைய சம்பவங்களை மீண்டும் கிளறிவிட்டு இலங்கைக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒற்றுமையினையும் அமைதியினையும் சீரழிக்கும் முயற்சியில் சர்வதேசம் செயற்படுகின்றது.

இவை அனைத்தையும் நிறுத்திவிட்டு இங்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை சம்பவங்களையும் இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த இவர்கள் ஏதேனும் செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் நலன் விரும்பியான பரமநாதன் திருநீலகண்டனினால் வறிய மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ)


## ST.JOHN'S COLLEGE & THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

**1.The Cambridge Teaching Knowledge Test (TKT)**

TKT is a leading international qualification for teachers of English. Whether you teach English as a subject. or teach other subjects through the English Mediun, TKT will help you to improve your skills.

A six month course which leades to TKT Classes will be held on Tuesdays & Wednesdays From 3.00-5.00 p.m, taught by Mr.Mick Chatwin an experienced, cambridge- qualified teacher from the U.K.

**2.Preliminary English course for School Leavers & Job Seekers- Level-1**

A three month foundation course in English, covering the four skills of the language Classes: Weekdays 3.30-5.30 p.m.

**3.Pre- school & Primary Teacher Training (with IT, English & Sinhala)**

A one year Diploma Course (250 Hrs)
Classes: 2nd & 4th Saturdays of the month, 8.00 a.m- 4.30p.m.& workshops during school vacations.

**4.Sinhala Language.**

i) Spoken Sinhala- Level 1 (60Hrs)- 3/6 months course
ii)Second Language Sinhala for G.C.E. (O/L) 2014 December Examination (3 month course)

Covering G.C.E. O/L syllabus & discussion of past question papers Classes: Weekdays & Saturdays.

**5.English Language Classes for 2nd & 3rd sittings of G.C.E. O/L& A/L**

**6.English Literature classes for 2nd sittings of G.C.E. O/L, A/L & External Degree**

**7.G.C.E. A/L classes (Science & Maths) for 2nd & 3rd sittings**
Applications close on **20th September 2014**

Programme Registration & Commencement: **30th September 2014, 4.00 p.m.**

For more information contact:

**The Director,**
**The Jaffna Academy & School of Technology**
**021 321 6006, 021 222 8585**

**The Principal**
**St.John's College**
**Jaffna.**

(சி-8477)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 2.5 சூரி. செவ். 5 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L தற்காலிக வேலை (பிரான்ஸ் Not PR)
தொ.இ: B/3558

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 74
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L, படவரைஞர், தாதியர் பயிற்சி நெறி/ தாதியர்
தொ.இ: B/3559

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 49.5
உயரம்: 169cm
தகைமை/தொழில்: BSc, MBS/ நிரந்தர வேலை (வங்கி)
தொ.இ: B/3560

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 36
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L, தாதியர்
தொ.இ: B/3561

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 43.75 செவ். 8 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/2716

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா. 30 செவ். 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
தொ.இ: G/2718

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 77
உயரம்: 5'5"
தகைமை/தொழில் BIT
தொ.இ: G/2721

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 34
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/2722

### கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் அரசாங்கத்தை ஒழித்துக்கட்டுவதே நோக்கம்

## சஜித் எம்.பி. ஆவேசம்



வருடாந்த மாநாட்டிற்கு பின்பு ஐ.தே. கட்சியின் மீது கொண்ட நல்லெண்ணம் காரணமாக மக்கள் அலை வெள்ளம் போன்று ஒன்றிணைந்து வருகின்றனர். தற்போது எமக்கு பதவி மோகம் கிடையாது. மாறாக இவ்வரசை அடியோடு ஒழித்து கட்டுவதே எமது நோக்கமாகும் என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்டோருக்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுகளை வழங்கும் அரசாங்கம் வெள்ளையர்களை போன்று அரசு மக்களிடமிருந்து வேலை வாங்கி குறித்த பணங்களை மீள பெறுகின்றது எனவும் சாடினார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட லுனுகம் வெஹற பிரதேச செயலகத்தின் மக்களுக்கு 30 இலட்சம் ரூபா செலவில் தண்ணீர் பவுசர் மூலமாக சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எவருடைய உதவியுமின்மையால் மன ரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமன்றி சிறுநீரக நோய் போன்ற நோய்களுக்கு அம்பாந்தோட்டை மக்கள் உள்ளாகியுள்ளனர். வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை அரசாங்கம் எவ்வித உதவியையும் வழங்கவில்லை. மாறாக எதிர்க்கட்சியை சேர்ந்த எங்களுக்கு இப்பிரச்சினையை தீர்க்கும் அளவுக்கு பணம் கிடையாது. இருப்பினும் எதிர்க்கட்சி என்ற வகையில் இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு மும்முரமாக செயற்பட்டு வருகிறோம்.

நாட்டின் சம்பிரதாய எதிர்க்கட்சி அரசாங்கத்தை விமர்சிப்பதிலேயே குறியாக இருக்கும். இருப்பினும் அம்பாந்தோட்டையில் சம்பிரதாய எதிர்க்கட்சியிலிருந்து விலகி நவீன எதிர்க்கட்சியாக நாம் உருவெடுத்துள்ளோம்.

அரசாங்கமானது வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உலர் உணவு பொருட்களை வழங்கி குறித்த பணத்தை மீளப் பெறும் வகையில் 12 நாட்கள் மக்களிடம் வேலை வாங்குகிறது. இத்தகைய செயலானது நாட்டை ஆண்ட வெள்ளையர்கள் வரி செலுத்த முடியாத அப்பாவி மக்களிடமிருந்து வீதிகளை நிர்மாணிப்பதற்கு வேலை வாங்கியது போன்றாகும். எனவே, 6 ஆயிரம் ரூபாவிற்காக 12 நாட்கள் வேலை வாங்குவது பெரும் அநியாயமாகும். இதனால் ஒரு நாளைக்கு 500 ரூபாவே வருமானமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலையில் ஐ.தே.கட்சி ஆட்சி காலத்தில் இருந்த மக்கள் நலன் சேவைகளை இவ்வரசு தலைகீழாக மாற்றியுள்ளது. இதற்கு பதிலாக மக்களுடைய பணங்களை விரயம் செய்கிறது.

எனவே, தற்போது இவ்வரசின் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியின் 68 ஆவது வருடாந்த மாநாட்டின் பின்பு மக்கள் கட்சி மீது அலை வெள்ளம் போன்று ஒன்றிணைகின்றனர். தற்போது மக்கள் எம்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே தற்போது எமக்கு பதவி மோகம் கிடையாது. மாறாக இவ்வரசை அடியோடு ஒழித்து கட்டி நீதியான மக்கள் ஆட்சியை உருவாக்குவதே எமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நாலரை வயது சிறுமி கடத்தல்; 10 பேரிடம் வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

குருநாகல், நிகதலுபொத, பன்னவ பகுதியிலுள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை கடத்தப்பட்டதாக கூறப்படும், நாலரை வயதுச் சிறுமியை தேடி குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில், குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவிக்கின்றார்.


இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் கடத்தப்பட்ட சிறுமியின் தந்தை உள்ளிட்ட 10 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 140 |
| தக்காளி | 40 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 70 | 100 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| க்ருணைக் கிழங்கு | 90 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 60 |
| போஞ்சி | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 40 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-35 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 132


டொறின் மன்மதநாயகம்





ராகுலன் பாலா



கோகிலன் கோபி





பத்மகுமார் காயத்திரி



பையன் : நாங்க எல்லாம் 10 வயசுல பத்மினிய கரெக்ட் பண்ணினவங்க

பொண்ணு : நாங்க எல்லாம் ஒரு வயசுலயே ஒபாமாவையே செருப்பால அடிச்சவங்க??

ஜோய் வோசியர்




சுஜன் மகேந்திரன்

**"கைகளை நீட்டாதீர்"**


இது அரசுப்பேருந்தில் மட்டும் இருக்க வேண்டிய அறிவிப்பு அல்ல...

அரசு அலுவலகங்களிலும் தான்!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ்காந்தி கொலை; கட்டவிழும் மர்மங்கள்




- எழுதியவர் ஒரு பத்திரிகையாளர்.
- சிவராசன், ராஜீவ்காந்தி கொலை செய்த பின் ஏன் டில்லி போனார்?
- இந்தக் கொலையாளிகள யார்?
- தற்கொலைதாரி தணு யார்?
- இவ்விடயம் பிரபாகரனுக்குத் தெரியுமா?

**“ஆரம்பக் கட்டத்தில் உள்ளவற்றைப் பார்க்கும் போது இவர்கள் பிரபாகரனுக்கு தெரிந்தே வந்தவர்களாக தெரிகிறது. சில தகவல் தொடர்புகள் இரகசிய சாம்பாஷணைகளில் தெரிகிறது. பின்னர் ஒருவேளை பிரபாகரனுக்கு தெரிந்து அவரே நினைத்திருந்தால்கூட அவரால் தடுக்க முடியாமல் போயிருக்கலாம் என்பதைதான் நான் உணர்கிறேன். 1991 மார்ச் ஏப்ரலில் வந்த சிவராசன் டீம் பின்னர் எல். டி.டி.இ சம்பந்தப்படாத நபர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தி வந்தது.”**

24ஆண்டுகளான பின்னரும் இன்னும் விலகாத மர்மக் கதையாகத் தொடர்கிறது ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவம்!

குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை பெற்றவர்களும் இந்தக் குற்றத்தை விசாரித்தவர்களும் இப்போது அளித்துவரும் வாக்குமூலங்கள் மூல வழக்கையே மொத்தமாக மாற்றிவிடக் கூடியவை. ராஜீவ் கொலை வழக்கை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வழங்கிய மரண தண்டனை தீர்ப்பு, இப்போது உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்ச் முன்பாக இருக்கிறது. கொலைச் சதி சம்பந்தமாக விசாரிக்க அமைக்கப்பட்ட பல்நோக்கு ஆணையம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தன்னுடைய விசாரணை காலக்கட்டத்தை நீட்டித்துக்கொண்டே போகிறது. ஜெயின் கமிஷன் குற்றஞ்சாட்டிய நபர்கள் இன்னமும் விசாரணையே செய்யப்படவில்லை.


தணுவும் சிவராசனும்

இந்த நிலையில் ராஜீவ் கொலைச் சம்பவம் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வந்துவிட்டன. அவை கிளப்பும் சந்தேகங்கள் மலையளவு உள்ளன. அதற்குத்தான் பதில் சொல்வார் யாரும் இல்லை!

**எழுதியவர் ஒரு பத்திரிகையாளர்!**

இதோ டில்லியில் இருந்து புதிய குரல். எழுப்பி இருப்பவர் ஃபெராஸ் அஹ்மத் என்ற மூத்த பத்திரிகையாளர். அவர் எழுதியுள்ள புத்தகத்தின்பெயர், “ராஜீவ்காந்தி படுகொலை ஒரு உள்வே லையா?’ [Assassination of Rajiv Gandhi AN INSIDE JOB?].

இந்தப் புத்தகத்தை முன்னாள் அவுட்-லுக் ஆசிரியர் வினோத் மேத்தா வெளியிட்டார். முன்னாள் பி.ஜே.பி தலைவர் கோவிந்தாச்சாரியார், முன்னாள் சி.பி.ஐ அதிகா ரிகள் அமோத் கான், ஜனதாதளக் கட்சி பொதுச்செயலாளர் எஸ்.சி. தியாகி ஆகியோர் இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கெடுத்தது அவர்களுக்கும் அந்தப் புத்தகத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டின. “ஒரு நிருபராக இருந்தவர் இப்படியொரு புத்தகம் எழுதியிருப்பது நல்ல முன்னுதாரணம்’ என்று பாராட்டினார்கள்.

“ராஜீவ் காந்தி கொலை ஒரு “ஒப்பந்தக் கொலை’. அரசியல் ஆதாயத்துக்காக நடந்தது. இந்தக் கொலை செய்தவர்களுக்கு இது உண்மையான நோக்கம் இல்லை. ராஜீவ் கொலை செய்யப்படுவதன் மூலமாக ஆதாயம் அடைந்தவர்கள்தான் இந்தக் கொலையைத் தூண்டியவர்கள்“ என்று வாதங்களை வைக்கிறது இந்தப் புத்தகம். சிவராசன், ராஜீவ்காந்தி கொலையின் பின் ஏன் டில்லி போனார்?

“என்னுடைய வாதம், சிவராசன் சுயேட்சையாக செயற்பட்டு இருக்கலாம் என்பதுதான். இதனால்தான் அவர் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பவில்லை. உயிருக்கு பயந்துதான் அவர் போகவில்லை. டில்லிக்கு போகக் காரணம் வேறு யாரோ அவருடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுத்திருந்துள்ளனர். யார் அது? இந்த கொலையில் இருவர் ஆதாயமடைந்தனர். ஒருவர் இலங்கை ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா. மற்றொருவர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று இதனால்தான் சொல்கிறேன்.

ராஜீவை கொன்ற பின்னர் யார் பயனடைவார்கள்? ஒன்று அவரது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அப்போது ஆட்சியில் இருப்பவர்கள். ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தியை கொன்ற மனித வெடிகுண்டு தணு ராஜீவ் காந்தி அருகில் செல்ல அனுமதிக்கக் காரணமாக இருந்தவர்கள் யார்? அவர் பல்வேறு தடைகளைத் தாண்டி ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்கச் செல்ல காரணமாக இருந்தது மறைந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் மரகதம் சந்திரசேகர் குடும்பத்தினர். மரகதம் சந்திரசேகரும் அவருடைய மகள் லதா பிரியகுமாரும் இதில் முக்கியமானவர்கள். இவர்களோடு லதா, கண்ணன், கோகிலா போன்றோர்களும் வந்துள்ளனர். ராஜீவ் பொதுக்கூட்ட மேடையில் ஏறுவதற்கு சற்றுமுன்புதான் கொல்லப்பட்டார். ஆனால், அவரோடு வந்த மரகதம் சந்திரசேகர், லதா பிரியகுமார், லலித் சந்திரசேகர் போன்றோர் ராஜீவ் காந்தியோடு உடன் வரவில்லை. அன்றைய தினம் இந்தப் பொதுக்கூட்டத்துக்குப் பின்னர் தரம் சந்த் ஜெயின் என்பவரது இடத்தில் ராஜீவ் காந்தியை தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்துள்ளது. ஆனால் அந்த இடத்தை ஆய்வு செய்த புலனாய்வுத் துறை அதை நிராகரித்தது. இப்படிப்பட்ட மோசமான ஏற்பாடுகளை யார் செய்தது?


ஃபெரோஸ் அஹ்மத்

மரகதம் சந்திரசேகர் குடும்பம் இந்திரா காந்தி குடும்பத்துக்கு வேண்டியவர்கள். மரகதம் சந்திரசேகர் மகன் லலித் சந்திரசேகரின் மனைவி சிங்களர். இந்த பொதுக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளுக்கு சிவராசன் சுமார் ஐந்து இலட்ச ரூபாயை லலித் சந்திரசேகருக்கு கொடுத்துள்ளார். நீதிபதி வர்மா கமிஷனும் சுப்பிரமணியன் சுவாமியும் இதைக் குறிப்பிடுகின்றனர். ஆனால், அவர்கள் மரகதம் சந்திரசேகர் குடும்பத்தினரை குற்றம்சாட்ட முயற்சிக்கவில்லை. “அவர்கள் அப்பாவித்தனமாக உதவியிருக்கலாம்’ என்கின்றனர். சி.பி.ஐ-யின் முதன்மை புலன் விசாரணை அதிகாரியான கே.ரகோத்தமன் ஐந்து இலட்ச ரூபாய் பொதுக்கூட்டத்துக்கு லலித் சந்திரசேகர் வாங்கியிருக்கலாம் என்கிறார். இவை அனைத்தும் சந்தேகத்தை அதிகமாகக் கிளப்பக் கூடியவை!“

**இந்தக் கொலையாளிகள் யார்?**

“இந்தக் கொலையாளிகள் யார்? கொலையாளிகள் குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவேண்டும். இவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்களை அனுப்பியது எல்.டி.டி.இ-யை சேர்ந்தவர்கள்தானா என்பது முக்கியம். சிவராசன் எல்.டி.டி.இ இயக்கத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால், இதற்கு முன்பு அவர் இருந்தது டெலோ. அந்த இயக்கம் அழிந்த பின்னர் இங்கு வந்துள்ளார். மிக முக்கிய சந்தேகம், சிவராசனின் இரட்டை வேடம். எல்.டி.டி.இ-யிலும் இருந்து கொண்டு மற்றவர்களுக்காகவும் செயற்பட்டு இருக்கலாம் என்கிற கோணம்தான் உறுதியாகத் தெரிகிறது. சிறப்புப் புலனாய்வு பிரிவு தலைவர் டி.ஆர்.கார்த்திகேயன் குறிப்பிட்டபடி, இந்த ஆபரேஷனுக்கு மொத்தம் ஒன்பது பேர் படகில் வந்து கோடியக்கரையில் இறங்கினார்கள். சண்முகத்தின் வீட்டில் தங்கி விட்டு வந்துள்ளனர். கடைசி வரை ஒன்றாக இருந்தவர்கள் சிவராசன், சுபா, தணு, நேரு போன்றவர்கள். இதில் தணு இறந்தவுடன் ஏனைய மூன்று பேர்கள் ஒன்றாக இருந்தனர். ஆனால் ஆதிரை, விஜயானந்த், சிவரூபன், கனகசபாபதி ஆகியோரை இந்த ஆபரேஷனில் சிவராசன் நேரடியாகச் சேர்க்கவில்லை. ஒருவரை ஜெய்ப்பூருக்கும் மற்றொருவரை போபாலுக்கும் வேறு சிலர் டில்லிக்கும் சென்றனர். இவர்களுக்கு இந்தக் கொலையில் என்ன தொடர்பு? பொத்தம் பொதுவாக இவர்கள் எல்லாம் சதி திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்கிறது சி.பி.ஐ. ஆனால், சிவராசன் உபயோகித்தது இந்தியர்களை மட்டுமே. அவர்களில் நளினிக்கோ இறந்து போன போட்டோகிராபர் ஹரிபாபுவுக்கோ சதித்திட்டம் பற்றி எதுவுமே முன்னமே தெரியவில்லை.“

**தணு யார்?**

ராஜீவைக் கொன்ற மனித வெடிகுண்டு தணு யார்? இதிலும் தெளிவு இல்லை. கார்த்திகேயன் சொல்கிறார், “தணு எல். டி.டி.இ என்பதற்கு ஒரு வீடியோ இருக்கிறது. அந்த வீடியோவில் ஒரு பெண் கொடியைப் பிடித்துச் செல்ல... அவர் தான் தணு’ என்கிறார். தணு இலங்கைச் சேர்ந்த ராஜரத்தினம் என்பவரது மகள் என்று சொல்லப்பட்டது. இது குறித்து டி.ஆர். கார்த்திகேயன், “தணு, ராஜரத்தினத்தின் மகளாக இருப்பார் என்று கருதுகிறோம்’ என்கிறார். இந்து ஃப்ரெண்ட்லைனில் ஒரு செய்தி வந்தது. இலங்கையிலிருந்து அதே ராஜரத்தினத்தின் நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு கருத்தைச் சொல்லியுள்ளார்.

## ராஜீவ் காந்தி கொலை ஒரு ஒப்பந்தக்கொலை!

“எனக்கு ராஜரத்தினம் நெருங்கிய நண்பர். அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ஒரு மகன். அவர் ஜெர்மனியில் செட்டில் ஆகியுள்ளார். இரண்டாவது மனைவியையும் நான் இருக்கும் இடத்திலிருந்து 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ளனர். நான் சென்று பார்த்தேன். இரண்டாவது மனைவியும் அவரது மத்திய தர வயதுடைய மகளும் இருந்தனர். இவருடைய இளைய மகள இலங்கை இராணுவத்தினர் சண்டையில் இறந்து போயுள்ளார்’ என்கிறார். இப்படிப்பட்ட தகவல்களுக்கிடையே தணு யார் என்பது நிரூபிக்கப்படவில்லை. சிவராசன் ஒருவரைப் பற்றிதான் தெரிகிறது. இந்தப் பெண்கள் தணு, சுபா யார் என்பதில் குழப்பம். சரியான ஆதாரங்கள் இல்லை.“

(மர்மம் நாளை தொடரும்...)


ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

918




## சூப்பர் ஷோட்ஸ்

வானத்தைப்போல- குட்டிகளுக்கு வயிற்றில் அடைக்கலம்கொடுத்து, மழையில் நனையும் ஆப்பிரிக்க சீட்டா!



அம்மா சவாரி- சென்ற வருடம் வெற்றிபெற்ற படம்!



துவச்சுத் தொங்க விட்டுட்டாங்க- கொடியில் விளையாடும் சென்ட்ரல் அமெரிக்கன் ஸ்பைடர் மங்கி!

யார்கிட்ட?- பிரேசிலில் முதலையை வேட்டையாடும் ஜாக்குவார் சிறுத்தை!



(தொடரும்)

## 09.2014 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1297 - ஸ்டேர்லிங் பாலம் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் ஸ்கொட்லாந்துப் படையினர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர்.
- 1541 - சிலியின் சண்டியாகோ நகரம் மிச்சிமா லொன்கோ தலைமையிலான பழங்குடிகளினால் அழிக்கப்பட்டது.
- 1609 - ஹென்றி ஹட்சன் மான்ஹட்டன் தீவைக் கண்ணுற்றார்.
- 1708 - சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் மன்னன் தனது மாஸ்கோவின் மீதான படையெடுப்பை ஸ்மொலியென்ஸ்க் என்ற இடத்தில் இடைநிறுத்தினான். அவனது படைகள் 9 மாதங்களின் பின்னர் தோற்கடிக்கப்பட்டன.
- 1709 - பிரித்தானியா, நெதர்லாந்து, ஆஸ்திரியா ஆகியன பிரான்ஸ் மீது போர் தொடுத்தன.
- 1802 - பிரான்ஸ் சார்டீனியா பேரரசை இணைத்துக் கொண்டது.
- 1889 - யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் (The Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகை டி. பி. செல்லப்பாபிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1893 - முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காகோவில் ஆரம்பமானது.
- 1897 - எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மன்னன் கஃபா இராச்சியத்தைக் கைப் பற்றினான்.
- 1906 - மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் என்ற சொற்பதத்தை தென்னாபிரிக்காவில் வன்முறையற்ற இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்தார்.
- 1914 - ஆஸ்திரேலியா புதிய பிரித்தானியத் தீவினுள் நுழைந்து அங்கு நிலைகொண்டிருந்த ஜேர்மனியப் படைகளை வெளியேற்றினர்.
- 1919 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் ஹொண்டுராசினுள் நுழைந்தனர்.
- 1926 - பெனிட்டோ முசோலினி மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பக்கிங்ஹாம் அரணமனை ஜேர்மனியினரின் வான் தாககுதலில் சேதமடைந்தது.
- 1961 - டெக்சாசை 4 ஆம் கட்ட சூறாவளி கார்லா தாக்கியது.
- 1978,- அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர், எகிப்திய அதிபர் அன்வர் சதாத், இஸ்ரேல் பிரதமர் பெகின் ஆகியோர் மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க காம்ப்டேவிட்டில் சந்தித்தனர்.
- 2001 - வான் தாக்குதல்களில் உலக வர்த்தக மையம் எரிகிறது.
- 1989 - ஹங்கேரிக்கும் ஆஸ்திரியாவுக்குமான எல்லை திறந்துவிடப்பட்டதில் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனி மக்கள் தப்பியோடினர்.
- 1992 - ஹவாய் தீவை சூறாவளி இனிக்கி தாக்கியதில் தீவு பலத்த சேதத்தைச் சந்தித்தது.
- 1997 - ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கிய தனியான ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தை அமைக்க ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்தனர்.
- 2006 - ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1862 - ஓ ஹென்றி, ஆங்கில எழுத்தாளர் (இ. 1910)
- 1917 - பேர்டினண்ட் மார்க்கோஸ், பிலிப்பீன்ஸ் அதிபர் (இ. 1989)

### இறப்புகள்

- 1921 - சுப்பிரமணிய பாரதியார், (பி. 1882)
- 1948 - முகம்மது அலி ஜின்னா, பாகிஸ்தான் ஸ்தாபகர்
- 1957 - இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர் (பி. 1924)
- 1971 - நிக்கிட்டா குருசேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (பி. 1894)
- 1973 - சல்வடோர் அலெண்டே, சிலியின் அதிபர் (பி. 1908)
- 2009 - யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (பி. 1927)

### சுப்ரமணிய பாரதியார்



பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கப்படும் சுப்ரமணிய பாரதியார், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார்.

அவருக்கு பெற்றோர் இட்ட பெயர சுப்பிரமணியன். இவர் ஒரு தமிழ் கவிஞர். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல்தெறிக்கும் விடுதலைப்போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்த வாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர்.

இவர் பள்ளியில் படித்துகொண்டிருக்கும் பொழுதே 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

தம் தாய்மொழியாம் தமிழ்மொழிமீது அளவு கடந்த பற்றுக்கொண்ட இவர், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றிப் பாடியுள்ளார். விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் "தேசிய கவியாக" போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரனாகத் திகழ்ந்தார்.

சிறுவயதிலேயே பாரதியாருக்கு தமிழ்மொழிமீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார், இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். அன்றுமுதல் இவர் "சுப்பிரமணிய பாரதியார்" என அழைக்கப் பெற்றார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனிப் புலமைப்பெற்று விளங்கினார். 1912 ஆம் ஆண்டு கீதையை தமிழில் மொழிப் பெயர்த்தார். 'கண்ணன்பாட்டு', 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்',' புதிய ஆத்திச்சூடி' போன்ற புகழ்பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப்பெற்றன.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியிலுள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றபோது, எதிர்பாராவிதமாக அந்தக் கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய் வாய்ப்பட்டார். பிறகு, 1921 செப்ரெம்பர் 11 ஆம் திகதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...இந்தியா 7 விக்கெட்டுக்களுக்கு 225 ரன்கள் எடுக்க மேற்கு இந்தியா 123 ரன்களுக்கு சுருண்டது. இதற்கு முக்கியக் காரணம் அனில் கும்ப்ளே. 12 ரன்களுக்கு 6 விக்கெட்டுக்கள். ஒருநாள் ஆட்டங்களில் வேறு எந்த இந்திய வீரனும் இன்னும் இந்தச் சாதனையை முறியடிக்கவில்லை. காம்ப்ளி 68 ரன்கள் எடுக்க சச்சின் எடுத்தது 28 ரன்கள் மட்டுமே.

ஆனால், லாராவின் முக்கியமான விக்கெட்டை சச்சின் வீழ்த்தி வெற்றிக்கு வழி வகுக்க, அவனது பேட்டிங் பற்றி யாரும் வாய் திறக்கவில்லை. சச்சின் பேட்டிங்கை விட அவனது பௌலிங் இந்தத் தொடரில் இந்தியாவிற்குக் கைகொடுத்தது. ஆக, யாருமே சச்சினைக் குறைகூட முடியவில்லை.

இந்தியா ஹீரோ கோப்பையை ஜெயித்தது. சச்சின் ஹீரோ கோப்பை போட்டியில் ஹீரோ ஆனான். ஒரு ஹீரோவை நாம் அவன்/ இவன் என்று அழைக்கலாமா? பதினாறு வயதில் டெஸ்ட் போட்டி ஆடத் துவங்கியபோது முதல் அத்தியாயங்களில் அவன் என்று எழுதியபோது அது தவறாகப் படவில்லை. தேவாரத்தில் திருஞான சம்பந்தர் எல்லாம் வல்ல சிவபெருமானை தோடுடைய செவியன். உள்ளம் கவர் கள்வன் என்று விகுதியிட்டுத்தான் பாடுகிறார். அது இறைவன் மேல் உள்ள அன்பினால், இருப்பினும் என்னதான் அன்பும் உரிமையும் இருந்தாலும் உலக கிரிக்கெட் அரங்கில் சச்சின் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்ட காரணத்தினால் இனி நாமும் சச்சினை அவர் என்று மரியாதையுடன் அழைப்போம். இன்றைக்கு சச்சின்; சிகரங்களை உரசிக் கொண்டிருக்கும் நிலையில் சச்சினை அவர் என்று அழைப்பதுதான் சிறந்தது. ஆங்கிலத்தில் இந்தப் பிரச்சினை இல்லை. He என்பது பொதுவான வார்த்தை. இதில் ஏக வசனமோ அல்லது மரியாதையோ தொனிக்காததால் ஆங்கிலத்தில் எழுதுவதில் வசதி.

ஹீரோ கோப்பை முடிந்த கையோடு நியூசிலாந்திற்கு இந்திய அணி பயணமானது. சச்சினுக்கு நீண்டகாலமாகவே இன்னிங்சை ஓபனிங் செய்ய வேண்டும் என்று ஆசை. இதற்கு முக்கிய காரணம் அதிக ரன்கள் எடுக்க அதிக ஓவர்கள் கிடைக்கும் என்பதுதான். ஒவ்வொரு

**சச்சின் சுழற்பந்து வீச்சாளர் என்று அடைமொழி குத்தப்பட்டு இருந்தாலும் சச்சின் வீசும் ஒவ்வொரு பந்தும் ஒவ்வொரு ரகமாக இருக்கும். லெக்ஸ்பின், ஆஃப்ஸ்பின், கூக்ளி, மிதமான வேகம், மெதுவான பந்து என சச்சின் எந்த ரகமான பந்து வீச்சாளன் என அவருக்கே தெரியாத அளவிற்கு ஒரு பௌலர்!**




### பௌலராக சச்சின் புதிய அவதாரம்

முறையும் ஐந்தாவது அல்லது ஆறாவது ஆட்டக்காரராக களம் இறங்கும் போது குறைந்தது 34-40 ஓவர்கள் முடிந்திருக்கும். மீதமுள்ள 10-15 ஓவர்களில் அதிகம் நாற்பது அல்லது ஐம்பது ரன்கள் எடுத்தாலே அதிகம். எனவே தான், தன்னால் ஒருநாள் ஆட்டங்களில் அதிக ரன்கள் எடுத்து சோபிக்க முடியவில்லை என்று சச்சின் திடமாக நம்பினார். ஆனால், வாரியமோ, அணித் தலைமையோ அல்லது அணிமேலாளரோ இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

காரணம் புதுப்பந்து என்பதால் அநாவசியமாக ரிஸ்க் எடுக்கவேண்டாம் என்பதுதான். மேலும் தொடக்க ஆட்டக்காரர்கள் சரிந்தால் ஆட்டத்தைத் தூக்கி நிறுத்த சச்சின் பேட்டிங் கண்டிப்பாக தேவைப்படும். அவ்வாறு இல்லாமல் இன்னிங்சை ஓபன் செய்யும்போது சச்சின் ஆரம்பத்திலேயே ஆட்டம் இழந்தால் பின்னால் வரும் வீரர்கள் சோர்ந்துவிடுவார்கள். ஆட்டத்தைத் தூக்கிநிறுத்த சரியான பேட்ஸ்மென் கிடைக்க மாட்டார்கள். இந்த லாஜிக் ஓரளவு சரியாக இருந்தாலும் சச்சினுக்கு இன்னிங்ஸ் ஓபன் செய்ய வேண்டும் என்ற ஆசை விடவில்லை. இதற்காக ஒரு தீர்வு நியூசிலாந்து போட்டிகளின்போது கிடைத்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 14**

**பரமஹம்ஸ சுவாமி**

...நுண்ணறிவில் உங்கள் இருப்புத்தன்மையின் உள்ளிருக்கும் ஆற்றல் சாதாரணமாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் திறந்து மிகவும் சுலபமாக அதை வெளிப்படுத்துகிறீர்கள். செயற்படுத்துகிறீர்கள். விஞ்ஞானிகள் மற்றும் பெரிய கம்பெனிகளின் தலைமை நிர்வாகிகள், அவர்கள் துறையில் ஏதேனும் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தும் பொழுது தங்கள் வெற்றிக்குக் காரணம் தங்கள் புத்திக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று-அதுவே அவர்களுக்குத் தேவையான ஆற்றலைத் தந்தது அல்லது அவ்வாறு ஒரு முடிபையெடுக்கும் துணிவைத் தந்தது என்று மீண்டும் மீண்டும் சொல்வதைப் படித்திருப்பீர்கள். ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொருவரிடமும் நுண்ணறிவுக்கான ஆற்றல் உள்ளது. நான் உங்களிடம் கேட்கிறேன். உங்களில் எத்தனை பேர் வாழ்க்கையில் ஒரு முறையாவது இதை அனுபவித்திருக்கிறீர்கள்- நீங்கள் ஒருவரைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தொலைபேசி மணி அடிக்கிறது. எடுத்தால் அவர்; அல்லது நீங்கள் ஏதோ ஓர் இடத்திற்குச் செல்கிறீர்கள்; அந்த இடத்திற்கு நீங்கள் ஏற்கனவே சென்றிருப்பதுபோல உணர்கிறீர்கள்; அல்லது இதுபோன்ற வேறு சம்பவங்கள்? பாருங்கள்; இவை எதிர்பாரா விதமாக நுண்ணறிவை உங்கள் வாழ்க்கையில் சந்தித்த தருணங்கள். இந்தத் தருணங்களில் நீங்கள் எதிர்பாராத விதமாக தியான நிலையில் இருந்திருக்கிறீர்கள். இவற்றின் மூலம் உங்கள் இருப்புத்தன்மை உங்களுடன் தொடர்பு கொள்ள முயல்கிறது. ஆனால், நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இவற்றை காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதை என்று ஒதுக்கித் தள்ளி உங்கள் இருப்புத் தன்மையை புறக்கணித்துவிடுகிறீர்கள். நாம் நமது இருப்புத்தன்மையின் உயர் பரிமாணங்களை முழுவதுமாக புறக்கணித்து விடுகிறோம். உங்களில் 80 சதவீதம் பேருக்கு நிகழ்ந்த ஒன்று எவ்வாறு காக்காய் உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக இருக்க முடியும்? இதுபோன்ற நுண்ணறிவின் கணங்கள் உங்களுள் மறைந்துள்ள ஆற்றலின் தெளிவான அறிகுறி என்பதில் தெளிவாக இருங்கள். நீங்கள் இதனை கண்டு கொண்டு ஊக்கப்படுத்தினால் உங்களால் இருப்புத்தன்மையின் உயர் பரிமானங்களை வெளிப்படுத்த முடியும். லேஸர் மற்றும் மேஸர் துறையில் பெரும் மேதை டாக்டர் சார்லஸ் டவுன்ஸுடன் ஒருநாள் உணவருந்தும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவரிடம் கேட்டேன். இது எவ்வாறு நிகழ்ந்தது? இதை எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது? என்று அவர் மிக அழகாக இவ்வாறு பதில் அளித்தார். ஒருநாள் வாஷிங்டன் dc-யில் உள்ள ஒரு பூங்காவில் அமர்ந்திருந்த பொழுது திடீரென்று எனக்குள் ஏதோ ஒன்று நிகழ்ந்தது. அந்த முடிபு எனக்குள் தெரிந்தது. திடீரென்று அந்தத் தீர்மானம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. எனக்குக் கிடைத்ததை நான் உடனே எழுதி வைத்துவிட்டேன். பிறகுதான் நான் அந்தக் கஷ்டத்தை உணர்ந்தேன். என்னிடம் முடிவு இருந்தது. ஆனால் வழிமுறைகள் இல்லை. அதை எவரிடமும் சமர்பிக்க முடியாது. ஏனெனில் எனக்கு முடிபு மட்டுமே தெரியும். வழிமுறைகள் தெரியாது. பிறகு நான் நிதானமாக அமர்ந்த பொழுது தர்க்க ரீதியான வழிமுறைகள் கிடைத்தன. சார்லஸ் டவுன்ஸ் மட்டுமல்ல ஐன்ஸ்டீனும் இதையேதான் சொல்கிறார். எனக்குள் புதிதாக நிகழ்ந்த எதுவுமே நுண்ணறிவு மூலமாக வந்ததே அன்றி புத்தியின் மூலமாக அல்ல அவர் -அழகாக சொல்கிறார் நுண்ணறிவு பெற்ற மனம் ஒரு புனிதப்பரிசு. பகுத்தறியும் மனமோ ஒரு விசுவாசமான வேலையாள் என்று நாம் பரிசை மறந்து வேலைக்காரனை கௌரவிக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்கியிருக்கிறோம். நாம் நம்பினாலும் நம்பாவிடினும் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிடினும் நுண்ணறிவு என்ற ஒன்று நம்மிடம்



இருக்கிறது. அதை எப்பொழுதும், ஒரே சீராக அடைய முடியுமா? என்பது அவருக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், யோகிகளும் ஞானிகளும் அதை முயற்சி செய்து அடையமுடியும். அது உன்னிடம் எப்பொழுதும் இருக்கும். என்பதையும் உறுதியாகசொல்ல முடியும் என்று மீண்டும் மீண்டும் சொல்லி வந்திருக்கிறார்கள். நீங்கள் நுண்ணறிவைப் பரிசு என்று எண்ண வேண்டாம். நீங்கள் அதற்காக முயற்சிக்க முடியும். முயன்றால் அது உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகி விடும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணையால் தாக்கப்பட்டது மலேசிய ஏர்லைன்ஸ் விமானம்

## ஹாலாந்து பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது

உகரைன் வான்பரப்பின் மேலாக பறந்து கொண்டிருந்த மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கான வாய்ப்பு அதிகம் என்பதைத்தான் ஹாலாந்து விசாரணை அறிக்கை காட்டுவதாக மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் தெரிவித்தார்.

'விமானம் விழுந்த இடத்தில் உள்ள எஞ்சிய பாகங்களை கண்டெடுக்க அந்தப் பகுதிக்கு சென்று கொண்டிருக்கும் மலேசியக் குழுவுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் ரசாக் கேட்டுள்ளார். விமானம் ஏன் கீழே வீழ்ந்தது என்பதையும் இந்தக் குழு ஆரா யும்.

எம் எச் 17 விமானத்தில் பயணித்த 298 பேரும் கொலலப்பட்டனர். மிக வேகமாக பயணிக்கும் அதிக எண்ணிகையிலான பொருட்களால் தாக்கப்பட்டதால் விமானம் உடைந்து விழுந்ததாக ஹாலாந்து பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவோ, விமானியின் தவறு காரணமாகவோ இந்த விமானம் விழவில்லை என்று கூறப்பட்டுள்ளது. (இ)




# நெதர்லாந்திடம் சிறைகளையும் வாடகைக்கு எடுக்கும் நோர்வே

நோர்வேயின் சிறைக்கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுவரும் நிலையில், அருகே உள்ள நெதர்லாந்து நாட்டின் சிறைகளை வாடகைக்கு எடுக்க திட்டமிட்டுவருவதாக நோர்வே அரசு தெரிவித்துள்ளது.

நோர்வேயில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், சிறைகளில் இடம் கிடைக்கும்வரை, சிறைத் தண்டனையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது .

தற்போது நோர்வேயில் சுமார் ஆயிரத்து 300 பேர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் இடம் கிடைக்காமல் காத்திருக்கிறார்கள்.


பெல்ஜியத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அந்த நாட்டு சிறைகளில் இடமில்லாத காரணத்தால், சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிய கைதிகளுக்கு தனது நாட்டில் சிறைகளை வாடகைக்குத் தர நெதர்லாந்து ஏற்கனவே பெல்ஜியத்துடன் ஒரு ஒப்பந்தமிட்டிருக்கிறது.

பெல்ஜியம் நாட்டு மக்களில் சுமார் பாதிப்பேர் டச்சு மொழி பேசுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நோர்வேயின் இந்த ஏற்பாடு மாறுபட்டதாக இருக்கும் என்று நெதர்லாந்து கூறுகிறது. ஏனென்றால், நோர்வே ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடல்ல. மேலும் நோர்வே மக்கள் வேறு ஒரு மொழி பேசுபவர்கள் என சுட்டிக் காட்டியுள்ளது. (இ)

# உக்கிரமடையும் போர்

## ஈராக்கிற்கு ஆயுதங்களை வழங்க பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது




ஈராக் இராணுவத்துக்கு ஆயுதங்களை அளிப்பது குறித்த தகவல்களை பிரிட்டன் வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிக் ஸ்டேட் என்ற பெயரில் செயற்படும் தீவிரவாதக் குழுவை எதிர் கொள்வதற்காக ஈராக்கிய இராணுவத்துக்கு 25 இலட்சம் டொலர்கள் மதிப்பிலான ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

கனரக இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் அதற்கான தோட்டாக்கள் வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் பாலான் தெரிவித்துள்ளார்.

குர்து படைகளுக்கும் பிரிட்டன் உதவி செய்வதாக அவர் தெரிவித்தார். ஈராக் இராணுவத்துக்கு கொடுக்கப்படும் ஆயுத உதவிகள் அந்நாட்டுக்குப் போய்ச் சேரும் என்று தெரிவித்தார். ஏற்கனவே இஸ்லாமிக் ஸ்டேட் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரிட்டன் மனித நேய உதவிகளை செய்து வருகிறது. அமெரிக்கா இஸ்லாமிக் ஸ்டேட் தீவிரவாதிகளின் முக்கிய இலக்குகளை வான் மூலம் தாக்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)





# தஞ்சக்கோரிக்கையாளர்களை திரும்ப அனுப்புகிறது இஸ்ரேல்

இஸ்ரேல் சட்டவிரோதமாக 7 ஆயிரம் ஆபிரிக்க தஞ்சம் கோரிகளை அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பிவிட்டதாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் தெரிவித்துள்ளது.

சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டவர்களில் சிலர் அச்சுறுத்தலை சந்திக்கும் சூழலில் இருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

எரித்ரியா மற்றும் சூடானைச் சேர்ந்தவர்களை தனது கடினமான சட்ட நடைமுறைகளுக்கு உட்படுத்தி அவர்களுக்கு தஞ்சம் கிடைக்காத நிலையை இஸ்ரேல் உருவாக்குவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஆபிரிக்க தஞ்சம் கோரிகளை இஸ்ரேல் நடத்தும் முறை குறித்து பல மனிதவுரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன. இஸ்ரேலுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றவர்களை சட்டரீதியாக கையாள்வதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

# காட்டிலுள்ள உணவுத்தாவரங்கள் மிக வேகமாக அருகி வருகின்றன

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

உணவுத் தாவரங்களை ஒத்த, அவற்றுக்கு உறவான காட்டுத் தாவரங்கள் அருகி வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இது குறித்த தரவுகளையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் காட்டுத்தாவரங்கள் உணவுத் தாவரங்களுக்கு மிகவும் நெருக்கமானவைதான், அவற்றை உணவாக உண்ணவும் முடியும். ஆனால், இவை பல்வேறு வகையான சூழ்நிலைகளிலும் தாக்குப் பிடித்து வாழக்கூடியவையாகும்.

இருக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தி, அவற்றுக்கு அமைவாய் இவை வாழக்கூடியவை.

இருந்தபோதிலும், இவற்றில் பெரும்பாலானவை அவற்றை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள, மத்திய கிழக்கின் மோதல் வலயத்தில் வளர்கின்றன.

உலகில் இப்படியான காட்டுத் தானிய வகைகள் சிறப்பாக வளரக் கூடிய பல இடங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். அந்த இடங்களில் இவற்றை பராமரித்து வளர்த்தால், எதிர் கால உணவுத் தேவைக்கான மூலமாக இவை பயன்படுத்தப்பட லாம்.

பலதரப்பட்ட தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகிய வற்றை உற்பத்தி செய்வதற்காக இந்த காட்டுத் தாவரங்களையும், வழமையான உணவுத் தாவர ங்களுடன் சேர்த்து விவசாயிகள் வளர்க்கிறார்கள். உள்ளூர் கால நிலைக்கு தாக்குப் பிடித்து வாழக் கூடிய தாவரங்களை வளர்ப்பது இவர்கள் நோக்கமாகும்.

வெறுமனே காட்டு உணவுத் தாவரங்களை வளர்ப்பது என்பது அல்லாமல், விவசாயிகளும், தாவரங்களை வளர்ப்போரும், கால நிலை மாற்றத்துக்கு தக்கதான தாவரங்களை உருவாக்க உதவுவதே தமது நோக்கம் என்று கூறுகிறார் ப்ர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் நைஜல் மாக்ஸ்ட்டெட்.

காட்டுத் தாவரங்களில் பயனுள்ள உணவு வகைகளும், வரட்சியை தாக்குப் பிடிக்கும் வகைகளும் அடங்கும். 2050 அளவில் 9.6 பில்லியனாக அதிகரிக்கவுள்ள உலக மக்கள் சனத்தொகையின் உணவுத் தேவைக்கு இந்தக் காட்டு உணவுத்தாவரங்கள் மிகவும் அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்கள். (இ)

# ஆர்க்டிக்கில் காணாமற் போன கப்பல் 169 வருடங்களின் பின்னர் கண்டுபிடிப்பு

அட்லாண்டிக் தீவுப் பகுதியிலிருந்து ஆர்க்டிக் சமுத்திரம் வழியாக பசுபிக் பெருங்கடலுக்கு நீர்வழிப் பாதை ஒன்று முந்தைய காலத்தில் இருந்து வந்துள்ளது. ஆசியாவிற்கான குறுகிய கடல் வழியாகக் கருதப்பட்ட அந்த வடமேற்கு பாதையைக் கண்டுபிடிக்க கடந்த 1845 ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேரந்த ஆய்வாளரான சர்ஜான் பிராங்ளின் 128 அதிகாரிகளுடன் தனது பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

இந்த பயணத்தில் ஈடுபட்ட எச்எம்எஸ் எரெபஸ், எச்எம்எஸ் டெர்ரர் என்ற இரண்டு கப்பல்களும் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டன. 1848ஆம் ஆண்டிலிருந்து 1859 வரை வரலாற்றிலேயே நீண்ட காலத் தேடுதல் பணி நடத்தப்பட்டபோதும் நீர்வழிப் பாதையைக் கண்டறிய முடிந்ததே தவிர காணாமற்போன கப்பல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தப் பாதையும் வானிலையாலும், பனி மூடியிருந்ததாலும் பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லை.

கடந்த 2008ஆம் ஆண்டில் மீண்டும் இந்தப் பணியைத் தொடருவதாக கனடா அரசு அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்த தேடுதல் பணிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு கப்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.


நேற்று தலைநகர் ஒட்டாவாவில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் இதனை அறிவித்த அவர் இது ஒரு வரலாற்றுத் தருணம் என்று பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நீர்வழிப்பாதையில் கனடாவின் இறையாண்மையை வெளிப்படுத்தும் விதமாகவே கப்பல்களைத் தேடும் முயற்சி தொடங்கியதாக அரசுத் தரப்பு தகவல்கள் குறிப்பிடுகின்றன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் முன்னோடிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்

# (IMPLEMENTING BEST PRACTICES IN SCHOOL)



பொன்னம்பலம் அருணகிரிநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். கல்வி வலயம்.

பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் பண்புத்தர விருத்தி தொடர்பாக இலங்கையில் 2001 ஆம் ஆண்டு முதல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சில் மதிப்பீடு மற்றும் தர உறுதிப்பாட்டு அலகு 2001 இல் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலைகள் கல்வி முறைமையில் நிறைவேற்றும் பணிக்கூறுகள் தொடர்பாகவும் நிறைவேற்ற வேண்டிய பணிக்கூறுகள் தொடர்பாகவும் நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டு வந்தன. புதிய நூற்றாண்டுக்கான பாடசாலை



கல்வித் தரிசனம்

களை நிர்மாணித்தல் காலத்தின் தேவையாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் அளவு ரீதியான அபிவிருத்தி மட்டுமன்றி கல்வியின் பண்பு ரீதியான விருத்தி தொடர்பாக அண்மைக் காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படுவதும் தரமேம்பாட்டிற்காக புதிய வியூகங்கள் விடுக்கப்படுவதும் புதிய வேலைத்திட்டங்களை பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்குமான பல முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கல்வியின் பண்புத்தரம் எனக் குறிப்பிடப்படும் வேறு இரண்டு விடயங்கள் முதன்மைப்படுத்தப் படுகின்றன.

I.பண்பு சார் தன்மை என்பது சேவை பெறுபவர்களை திருப்தியடையச் செய்தல்.

II.பாடசாலைக் கல்வியில் வினைதிறனையும் பயனுறுதித்தன்மையையும் உறுதிப்படுத்துதல்.

பண்புத்தரத்தில் பிரதான ஏழு பண்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.செயலாற்றுகை (Perfomance)

2. நம்பகத்தன்மை (Reliability)

3.பொருத்தமான பண்புகள் (Features)

4. பொருத்தப்பாடு (Conformance)

5. நீடித்த பாவனை(Dlurability)

6. மீள தயாரிக்கக் கூடியதாக இருத்தல் (Serviceability)

7. கவர்ச்சிகரமாக இருத்தல் (Aesthelic)

கல்வியின் தரம் தொடர்பாக பல வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாவனைக்குரிய தகுதி (Fitness for Use) என்பது பொதுவான வரைவிலக்கணமாகும். கல்வியில் தரத்தை பேணுவதற்குகல்விச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் அதாவது சகல மனித, பௌதீக வளங்களும் தரமுடையவையாக இருக்கவேண்டும். உள்ளீடுகள் அனைத்தும் தரமுடையவையாகவும் செயன்முறைகள் அனைத்தும் தரமுடையவையாக இருந்தால் மாத்திரமே வெளியீடுகள் தரமுடையவையாக அமைய முடியும்.

பாடசாலைச் செயற்பாடுகளில் பண்புசார் தரத்தை மேம்படுத்துவதற்கு அங்கு நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளில் முன்னோடிச் செயற்பாடுகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்தப்படுவது காலத்தின் தேவையாகவுள்ளது. பாடசாலைகளில் முன்னோடிச் செயற்பாடு (Best Practices) என்பது ஒரு பாடசாலையானது தனது தற்போதைய நிலையிலிருந்து அதனை மேலும் நேர்முகமான அபிவிருத்திக்காக பாடசாலையின் வளங்களை வினைத்திறனுடனும் (Effeciently) விளைதிறனுடனும் (Effectively) பயன்படுத்தி புத்தாக்கத் தன்மையுடன் பாடசாலை சார்பாக பயன்படுத்துகின்ற ஒரு இலக்கை நோக்கிய நுட்பம் அல்லது செயற்பாடு எனலாம்.

மாணவர்களது மனப்பாங்கு மாற்றத்திலும் கல்விசார் நடத்தைகளிலும் நேர்முகமான ஒரு மாற்றத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் பரந்த வீச்சிலான தனிநபர் செயற்பாடுகள், கொள்கைகள் மற்றும் செயற்றிட்ட முறையிலான அணுகுமுறைகள் நல்ல முன்னோடிக் கல்விச் செயற்பாடுகள் எனக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பாடசாலையும் இந்த விடயம் தொடர்பாக தமது செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்வது இன்று அவசியமாகவுள்ளது.

முன்னோடிச் செயற்பாடுகளை பாடசாலைகளில் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகள் குறித்த பாடசாலைக்கு எந்தளவு தூரம் பொருத்தமானது, தேவை தொடர்பாக தீர்மானித்ததன் பின்னர் மாத்திரம் அதனைப் பயன்படுத்துதல்.

நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கொள்கைகள் இலக்குகளுக்கு ஏற்ப அமைந்திருத்தல்

பிரயோக ரீதியில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருத்தல்

சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்தக் கூடியதாக அமைந்திருத்தல்

பாடசாலையின் மனித, பௌதீக வளங்களுக்கு , சமூகச் சூழலுக்கு பொருத்தமாக இருத்தல்,

நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பாடசாலை முகாமைத்துவக் குழுவுக்கு போதுமான விளக்கம் கொடுக்கப்பட்டிருத்தல்.

பாடசாலைச் சமூகத்திற்கு புதிய செயற்பாடுகள் தொடர்பாக போதுமான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருத்தல்.

இலக்கினை பொருத்தமான வகையில் வரையறுத்திருத்தல்.

புதிய செயற்பாடுகள் மூலம் பாடசாலைக் கலாசாரத்திற்கான மாற்றங்களை நிர்ணயித்தல்.

முன்னோடிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திய பின் அவை தொடர்பான அறிக்கைகள், ஆவணங்கள் தயாரித்தலும் பேணுதலும்.

உ+ம்: முன்னோடிச் செயற்பாடு ஒன்று நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர்பாடசாலை இருந்தநிலைஅமுலாக்கத்தின் பின்னர் உள்ள நிலைமை தொடர்பான ஆவணங்கள்.

முன்னோடிச் செயற்பாடுகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்தும்போது அவற்றில் பின்வரும் பண்புகள் அமைந்திருப்பதை கவனிக்க வேண்டும்.

☞ உண்மைத்தன்மையும்நம்பகத்தன்மையும் உடையதாக இருத்தல்.

☞ ஏற்றுக்கொள்ளக்கூடியதாகஇருத்தலும் அனைவராலும் வரவேற்பிற்குரியதாகவும் விளங்குதலும்.



☞ புத்தாக்கத்தன்மையும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் இருத்தல்.

☞ அங்கீகரிக்கப்பட்டகல்விக்கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் தொடர்புடையதாக விளங்குதல்

☞ பயன்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் இலகுவாக இருத்தல்.

☞ நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அம்சங்களைக் கொண்டிருத்தல்.

☞ முன்மாதிரியாக விளங்குதல்.

☞ அதிசிறந்த கலாசாரம் ஒன்றை பாடசாலையினுள் கட்டியெழுப்பக் கூடியதாக இருத்தல்.

☞ பண்புசார் தரங்களை அடையக் கூடியதாக இருத்தல்.

பாடசாலைகள் தமது சூழலுக்கும் சமூக பொருளாதார கலாசார அம்சங்களுக்கும் பொருத்தமான முன்னோடிச் செயற்பாடுகளை பொருத்தமானதாக தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். சகல பாடசாலைகளிலும் சகல செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவது இலகுவானதல்ல. சகல நுட்பங்களையும் எல்லாக் காலங்களிலும் பிரயோகிக்க முடியாது. பொருத்தமான தந்திரோபாயங்களை பாடசாலை முகாமைத்துவம் பொருத்தமான நேரங்களில் பயன்படுத்த வேண்டும். முன்னோடிச் செயற்பாடுகளின் தாக்கத்தை அடையக்கூடிய அடிப்படைகளையும் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். முன்னோடி செயற்பாடு ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் போது அதனால் ஏற்பட்ட தாக்கங்களை உடனுக்குடன்அறிந்துகொள்வதற்கானபொறிமுறை ஒன்று பாடசாலையினுள் காணப்பட வேண்டும். பின்வரும் அடிப்படைகள் முக்கியமானவையாகும்.

☞ செயற்பாடுகளை துரிதப்படுத்தலும் காலத்தை சேமித்தலும்.

☞ மனித, பௌதீக, நேரவளங்கள் வீணாக்கப்படுவதை கட்டுப்படுத்தல்.

☞ செயற்பாடுகளுக்கான இலகுவான தன்மை

☞ குறைந்தளவு வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி உற்பத்தி திறனை அதிகரித்தல்.

☞ பாதுகாப்பான நடைமுறைகளை உறுதிப்படுத்துதல்.

☞ ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையின் பணியாளர்கள் ஆகியோரின் பண்புசார் தரத்தை மாற்றியமைத்தல்

☞ பாடசாலை அதன் பங்குதாரர்கள் தொடர்பான அபிமான மிக்க செயற்பாடுகள்.

☞ பாடசாலையின் தனித்துவத்தை அடையாளத்தை கட்டியெழுப்புதல்

☞ பாடசாலையின் கல்விசார் தரத்தை மேம்படுத்துதல்

☞ பாடசாலைக்கென ஒரு சிறந்த கலாசாரத்தை கட்டியெழுப்புதல்

☞ தொடர்ச்சியாக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் முன்னோடிச் செயற்பாடுகள், அதன் வியூகங்கள், செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அதனுடன் தொடர்புடைய தரப்பினர், சம்பந்தப்பட்ட ஆளணியினர் பின்வரும் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

1. அர்ப்பணிப்புடன் கூடிய செயலாற்றுகை

2. மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் நேர்ப்பாங்கான சிந்தனை யும் செயற்பாடும்

3.பாடசாலையின் இலக்கு அடையப்படுவது தொடர்பாக இலக்கு நோக்கிய நகர்வு.

4. குழு உணர்வும் குழு கலாசாரமும் காணப்படுதல்.

5. தனிநபர்களின் செயற் பாடுகளில் நேர்ப்பாங்கான நடத்தை மாற்றங்கள் காணப்பட வேண்டும்.

6.பாடசாலை பங்குதாரர்களிடையே பயனுறுதி வாய்ந்த தொடர்பாடுகளை கட்டியெழுப்புதல்.

பாடசாலைச்செயற்பாடுகள்தொடர்பாக பாடசாலையின் தலைமைத்துவம் அறிக்கைப்படுத்துவதில் கவனம் எடுக்க வேண்டும். அறிக்கையிடல் மூலமும் ஏனையோருக்கு செயற்பாடுகளின் முன்னேற்றத்தை தெரிவிக்க முடியும். முன்னோடிச் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையிடல் தொடர்பாக பின்வரும் படி முறைகளை கையாள்வது பொருத்தமானது.

1.காணப்படும் பிரச்சினைகள் தீர்வுக்கான வியூகத் தேவைகள்.

2. நடைமுறைப்படுத்தவுள்ள வியூகங்கள் தொடர்பாக பாடசாலைச் சமூகத்திற்கு அறிவுறுத்தப் பட்ட முறைகள்.

3. செயற்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் முறைகள்

4. செயற்றிட்டங்கள் அமுலாக்கப்பட்ட முறைகள்

5 .திட்டமிடல்-அமுலாக்கம் என் பவற்றின்போது எதிர்கொள்ளப் பட்ட சவால்கள்

6.தற்போது முன்னெடுக்கப் படும் முறைகள் அதற்குரிய ஆவணங்கள் பேணல்.

7.பாடசாலையில்பெற்றுக் கொள்ளப்பட்ட பயன்கள்.

8. தொடர்ந்தும் முன்னெடுப் பதற்கான ஏதுநிலை

செயற்றிட்டங்கள் தர வட்டங்கள் மற்றும் ஆய்வுகள் கூட அவை நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமிடலின் அடிப்படையில் சிறந்த முன்னோடிச் செயற்பாடுகளாக கொள்ளப்பட முடியும். பாடசாலைகளில் அமுலாக்கப்படும் முன்னோடிச் செயற்பாடுகளை இனங்கண்டு சிறப்பான செயற்பாடு களை நாட்டின் ஏனைய பாடசாலைகளிலும் முன்மாதிரியாக செய்யக் கூடிய வகையில் பகிரங்கப்படுத்த கல்வி அமைச்சின் தர உறுதிப் பாட்டு அலகு திட்டமிட்டுள்ளது. பாடசாலைகள் இதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லிபியா- அமெரிக்காவின் மற்றுமொரு புதைகுழி?

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா தமது மூக்குகளையும் ஆயுதங்களையும் நுழைத்த லிபியா அராஜகத்திலும் வன்முறையிலும் மூழ்கிக் கொண்டிருப்பது குறித்து மீசையில் மண் ஒட்டவில்லை என்று சாதிக்கிறது.

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் உள்ள அமெரிக்க தூதரக வளாகத்தை லிபியா டான் (லிபிய விடியல்) என் இஸ்லாமிய குழுக்களின் படைகள் கைப்பற்றியிருக்கின்றன.



லிபியாவில் மிஸ்ராத்தா என்ற கடலோர நகரத்தைச் சேர்ந்த இஸ்லாமிய போராளிகளைக்கொண்ட லிபிய விடியல் குழுவிற்கும் ஓடிப்போன ஜெனரல் காலிஃபா ஹிஃப்டருடன் சேர்ந்திருக்கும் கிழக்குப் பகுதி மற்றும் மேற்கத்திய மலை நகரமான சிந்தானைச் சேர்ந்த போராளிகள், கடாஃபியின் முன்னாள் வீரர்கள் ஆகியோருக்கும் இடையேயான உள்நாட்டுப்போர் தீவிரமடைந்திருக்கிறது.

எதிரெதிராக பிரிந்துள்ள ஆயுதம் தாங்கிய இந்த குழுக்களுக்கிடையேயான சண்டை தீவிரமடைந்ததை அடுத்து கடந்த ஜூலை மாதம் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் லிபியாவை விட்டு அண்டை நாடான துனிசியாவுக்கு ஓடிவிட்டார்கள். நிலைமை மேம்படும் வரை தூதரக நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகின்றன என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அறிவித்திருந்தது.

முன்னதாக, 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பெங்காசியில் அமெரிக்கத் தளம் ஒன்றில் நடந்த தாக்குதலில் அமெரிக்கத் தூதர் கிறிஸ்தோபர் ஸ்டீவன்ஸ், கடற்படை அதிரடி வீரர்கள் டைரோன் வுட்ஸ், கிளென் டோரத்தி, வெளியுறவுத் துறை தகவல் தொடர் அதிகாரி சோன் ஸ்மித் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இப்போது லிபிய விடியல் குழு திரிபோலி விமான நிலையத்தை கைப்பற்றியிருக்கிறது. லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பெங்காசியில் ஜெனரல் காலிஃபா ஹிஃப்டரின் படைகளுக்கு எதிராக லிபிய விடியல் குழுவினர் வெற்றிபெற்று வருகின்றனர்.

திரிபோலி விமான நிலையத்தில் லிபிய விடியல் அமைப்பு கைப்பற்றிய 11 ஜெட் விமானங்கள் செப்ரெம்பர் 11, 2001 இல் அமெரிக்காவில் நடத்தப்பட்டது போன்ற தாக்குதல்களை நடத்த பயன்படுத்தப்படலாம் என்றும் அமெரிக்கா எச்சரித்திருக்கிறது. இஸ்லாமிய குழுவினர் விமானங்களின் முன் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டு இணையத்தில் வெளியிடுகின்றனர். அவர்கள் வசம் ஏர்பஸ் 319 (பறக்கும் திறன், 3,700 நாட்டிக்கல் மைல்), ஏர்பஸ் 320 (3,300 நாட்டிக்கல் மைல்), ஏர்பஸ் 330 (4,000- 7,000 நாட்டிக்கல் மைல்), ஒரு ஏர்பஸ் 340 (7,900 நாட்டிக்கல் மைல்) வகையிலான விமானங்கள் சிக்கியிருக்கின்றன. இந்த விமானங்களின் பறக்கும் திறன் லண்டன், பாரிஸ், வோஷிங்டன் டிசி, நியூயோர்க் போன்ற மேற்கத்திய நகரங்களை எட்டுமளவிலானது.

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கெமரூன் அவரது நாடு, இதுவரை இல்லாத அளவு தீவிரமான, ஆழமான பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா தமது மூக்குகளையும், ஆயுதங்களையும் நுழைத்த லிபியா இன்று அராஜகத்திலும் வன்முறையிலும் மூழ்கிக்கொண்டிருப்பது குறித்து, தனது முன்னாள் தூதரக வளாகம்கூட இஸ்லாமிய தீவிரவாதிகள் வசம் போய்விட்டது குறித்து கருத்து கூறிய அமெரிக்க வெளியுறவுத் துறை கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சாதிக்கிறது.

நாங்கள் செய்திகளையும் வீடியோக்களையும் பார்த்தோம். கூடுதல் விபரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரம்வரை தூதரக வளாகம் பாதுகாப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், களநிலவரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்கிறார் ஒரு மூத்த வெளியுறவுத்துறை அதிகாரி. லிபிய அரசுடனும் தொடர்புடைய மற்ற குழுக்களுடனும் தொடர்ந்து உரையாடி வருகிறோம். வோஷிங்டனிலிருந்தும் வலெட்டாவிலிருந்தும் தூதரக அதிகாரிகள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார் அவர்.

லிபியாவுக்கான அமெரிக்க தூதர் டெபொரா ஜோன்ஸ், தூதரக வளாகம் கைப்பற்றப்பட்டதாகத்தான் தெரிகிறது. சூறையாடப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் ஜூலையிலேயே அந்த வளாகத்தை விட்டு போய்விட்டதால் அதை அமெரிக்காவின் இறையாண்மைக்குட்பட்ட பகுதி என கருத முடியாது என்று இன்னொரு அதிகாரியும் சப்பைக்கட்டு கட்டுகின்றனர்.

3 ஆண்டுகளுக்கு முன்பு லிபியாவின் அப்போதைய சர்வாதிகாரி முவாம்மர் கடாஃபிக்கு எதிரான இஸ்லாமிய குழுக்களுக்கு ஆயுதம் வழங்கி ஊக்குவித்தன நேட்டோ கூட்டமைப்பு நாடுகள். பெங்காசி நகரில் பெருமளவு படுகொலைகள் நடக்கவிருப்பதாக சொல்லி, அதை தடுப்பதற்காக லிபியாவில் ஆட்சி மாற்றத்தைக்கொண்டு வருவதாகக் கூறி கடாஃபியின் படைகள் மீது வான் வழி, கடல்வழி தாக்குதல் நடத்தின.

இறுதியில் கடாஃபியின் தலைக்கு விலை வைத்த நேட்டோ நாடுகள் அவரைப் பிடித்து கொடூரமாக கொன்றொழித்த இஸ்லாமிய பயங்கரவாத படைகளை லிபியாவை விடுவிக்க வந்த ஜனநாயக சக்திகள் என்று போற்றினர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர் என்று இளைய புஷ் அறிவித்து 13 ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கத்தை நிலைநாட்டவும் எண்ணெய் வளங்களைக் கைப்பற்றவும் ஆரம்பித்து வைத்த போரில் பரிதாபமான முறையில் தோற்றுக்கொண்டிருக்கிறது. தனது உண்மையான நோக்கங்களை மறைத்து அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாக பொய் சொல்லி தலையிட்ட ஆப்கானிஸ்தான், ஈராக், இப்போது லிபியா என அனைத்து நாடுகளும் திராத உள்நாட்டுப்போரில் சிக்கியிருக்கின்றன. அமெரிக்கா திட்டமிட்டு வளர்த்துவிட்ட இஸ்லாமிய பயங்கரவாத குழுக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பை திசைதிருப்புகின்றன.

ஒருவகையில் இத்தகைய நாடுகள் இப்படி உள்நாட்டுச் சண்டையில் முடிபே இல்லாமல் சிக்கியிருப்பது அமெரிக்காவிற்கு உதவவும் செய்யும். அடிமைகளை இப்படிச் சண்டையிட்டுக் கொள்ள வைப்பது ஆதிக்கம் செய்பவனுக்கு தொந்தரவாக மாறாது. அதே நேரம் அமெரிக்காவின் பிரச்சினையே வேறு.

2001 ஆம் ஆண்டுக்குப் பிறகு லிபிய சர்வாதிகாரி முவாம்மர் கடாஃபி மேற்கத்திய கோரிக்கைகளுக்கு அடிபணிந்து, லிபியாவின் அணு ஆயுத திட்டத்தை கண்காணிப்புக்கு உட்படுத்தி லிபியாவில் மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்கள் நுழைய அனுமதி அளித்தார். ஆனால், முழுமையாக பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு சரணடையவில்லை என்பது அமெரிக்காவின் பிரச்சினை.

அமெரிக்கா கொண்டு வருவதாகச் சொன்ன ஜனநாயகமும் சுதந்திரமும் அந்த மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்களுக்கானவைதான். கடாஃபியின் ஆட்சியின் கீழ் லிபிய தேசிய எண்ணெய் கழகத்திடம் உரிமம் பெற்று தொழில் செய்ய வேண்டிய அவர்களது அடிமை நிலையை ஒழித்து லிபியாவின் எண்ணெயை எடுத்து விற்பதற்கான ஜனநாயக உரிமையை ஈட்டிக்கொடுப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது ஆதாரங்களின் மூலம் அம்பலமானது.

ஈராக்கில் சாதித்துவிட்டோம் என்று இளைய புஷ் அறிவித்தது போன்று லிபியாவில் கடாஃபி வீழ்ந்தவுடன் நாம் அனைவரும் சேர்ந்து வெற்றியை சாதித்திருக்கிறோம் என்று அறிவித்தார் நேட்டோ தலைவர். ஆனால், அமெரிக்காவின் ஏகாதிபத்திய விரிவாக்க நடவடிக்கைகள் ஈராக்கைப் போலவே லிபியாவையும் வன்முறை சூழலுக்குள் ஆழ்த்தியுள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ பலமும் தொழில்நுட்ப வல்லமையும் உலகையே அதற்கு அடிமையாக்கும் நோக்கத்துக்கு உதவப் போவதில்லை. ஏகாதிபத்தியங்கள் வெறும் காகிதப் புலிதான் என்பதும் லிபியாவிலும் நிரூபணம் ஆகிக் கொண்டிருக்கின்றது. மற்றொரு புறம் அமெரிக்கா உதவியுடன் விடுதலை பெற்றதாக கூறப்படும் நாடுகளின் யோக்கியத்தை என்ன என்பதை லிபியாவின் நிலையிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறை அரசியல் அறியாதவர்களே நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர்

## அமைச்சர் ராஜித ஆதங்கம்



நடைமுறை அரசியலை புரிந்து கொள்ள முடியாதவர்களே தற்போது நாடாளுமன்றில் அங்கம் வகிக்கி ன்றனர் எனவும் நாடாளுமன்றத்தை முதலாளிமார் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய அபாயம் காணப் படுவதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றம்செய்யப்பட வேண்டும்.

தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படாவிட்டால், முதலாளிமார் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டை கைப்பற்றிக்கொள்வார்கள்.

தேர்தல் தொகுதி மக்களுக்கு பதில் சொல்லக்கூடிய ஓர் தேர்தல் முறைமை உருவாக்கப்பட வேண்டும். தேர்தல் முறைமை காரணமாக நாடாளுமன்றம் ஊழல் மோசடிமிக்கதாக மாற்றமடைந்துள்ளது.

அரசியல் பற்றி பேசக்கூடிய சொற்ப அளவிலானவர்களே இன்று நாடாளுமன்றில் அங்கம் வகிக் கின்றனர். நடைமுறை அரசியலை புரிந்து கொள்ளக் கூடியவர்களும் இன்று நாடாளுமன்றில் வெகு சொற்ப அளவிலேயே காணப்படுகின்றனர்.

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் நாட்டை மீட்டெடுத்ததனைப் போன்று, நாட்டு மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாணந்துறையில் நடைபெற்ற கட்சிக் காரியாலய அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்ற போது அமைச்சர் இதனைக் தெரிவித்தார். (இ)

## கட்டுப்படுத்த முடியாவிட்டால் தேர்தலை பிற்போடத் தயார்

### ஆணையாளர் அறிவிப்பு

கட்டுப்படுத்த முடியாத சம்பவங்கள் பதிவாகும் பட்சத்தில், ஊவா மாகாண சபைத் தேர்தலை பிற்போடத் தயார் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். மொனராகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தலை பிற்போடுவதற்கான சட்ட கொள்கைகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல்கள் ஆணையாளர், மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரி விக்கையில்,

நிர்வாக மாவட்டத்தில் கட்டுப்படுத்த முடியாத சம்பவங்கள் ஏதேனும் பதிவாகுமானால், 1988 இன் இரண்டாம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 26ஆவது சரத்தின் கீழ் தேவை ஏற்படின் தேர்தலை 14 நாட்களுக்கு பிற்போடுவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளது. தேர்தல்கள் ஆணையாளருக்கு செயற்படுத்துவ்தற்கான சில அதிகாரங்கள் உள்ளன. தேவை ஏற்படின் அவற்றை செயற்படுத்த முடியும். நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர சிரேஷ்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகர்கள் முதல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வரை எமக்கு ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவே உள்ளனர். இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என தான் எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் என்னிடம் தெரிவித்தனர். எனினும், வேட்பு மனு கிடைத்ததன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் மாத்திரமே அதனை மாற்றுவார். வேறு யாருக்கும் அதனை மாற்றும் அதிகாரம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கட்சி தாவும் நடவடிக்கை முடிபு

### ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஏனைய கட்சிகளில் இணைவோர் தொடர்பான பிரச்சினை முடிபுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இதனை தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவை கட்சியின் பிரதித் தலைவராக்குவதற்கும், கட்சியில் இருந்து வெளியேறிய வர்களை மீண்டும் இணைததுக் கொளளுமாறும் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை அடுத்தே இந்த விடயம் முடிவுக்கு வந்துள்ளதாக அமரதுங்க தெரிவித்தார்.

அத்துடன் கட்சியை பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிபை எச்சரிக்கையுடன் பார்ப்பதாக மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்க குறிப்பிட்டுள்ளார். (இ)

## ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக பொது அமைப்புக்களும் களத்தில்

### வழக்குத் தாக்கல் செய்ய முஸ்தீபு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க கொழும்பில் உள்ள சில பொது அமைப்புகள் உயர் நீமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதியின் பின்னரான அரசியல் சூழலில் 2010ஆம் ஆண்டு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச்சட்டம் ஏற்புடையது அல்ல என்றும் தேர்தல்- பொலிஸ் திணைக்களங்கள் உட்பட முக்கியமான அரச நிறுவனங்களை சுயாதீனமாக செயற்பட வழிவகுக்கும் 17 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்றும் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டி யிட்டு வெற்றி பெறலாம் என்று கூறுகின்ற 18 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு என்ற வாசகத்துக்கு மாறானது என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த பொது அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

முன்னாள் நீதியரசர் சரத் என் சிலவா கூறிய அடிப்படையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும எனவும் இலங்கை உயர் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை தொடர்பாகவும் சந்தேகம் வெளியிட்ட அநத அதிகாரி இது தொடர்பாக சர்வதேச மனித உரிமை ஆர்வ லர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் வேலைத் திட்ட ங்களை முன்னெடுப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் தெரி வித்தார்.

ஏனைய நாடுகளைப் போன்று இலங்கை உயர் நீதிமன்றமும் சுயாதீனமாக செயற்படுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்து மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க முடியும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதை தடுக்கும் நோக்கில் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா பிரதான அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி வருவதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் உருவாக்கிய இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா, பிரான்ஸ் உள் ளிட்ட மேற்குலக நாடுகளின் அரசியலமைப்புகளிலும் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக அல்லது பிரதமராக பதவி வகிக்க முடியாது என கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்று ஒரு தகவல்

### தேநீர்

5 ஆயிரம் வருடங்களுக்கு முன் சுஷன்- நங் என்ற அரசன் சீனாவை ஆட்சி செய்தார்.

அவருக்கு ஒரு பழக்கம் இருந்தது. அது என்ன வென்றால்... எப்பொழுதும் வெந்நீர்தான் குடிப்பார்.

ஒரு நாள் அவருக்காக அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அடுப்புக்குமேல் வளர்ந்திருந்த ஏதோ ஒரு செடியிலிருந்து காய்ந்து சருகாகி போயிருந்த ஒரு இலை கொதிக்கும் நீரில் விழுந்து விட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை.

சிறிது நேரத்தில் அதிலிருந்து நல்ல மணம் வீச ஆரம்பித்தது.

வெந்நீர் குடித்த மன்னருக்கு அந்த வாசனை மிகவும் பிடித்து விட்டது.

என்ன வென்று பார்த்தால் இலை கிடந்திருக்கிறது. சரி... இனிமேல் இந்த இலையைப் போட்டு தண்ணீரைக் கொதிக்க விடுங்கள் என்று உத்தரவிட்டார்.

அந்த இலை என்னவென்று நினைக்கிறீர்கள்.?

அதுதான் தேயிலை.

ஆசிரியாவில்தான் தேநீர் குடிக்கும் பழக்கம் முதன் முதலில் ஆரம்பமானது.

அதன்பின் பல காலம் கழித்து 1610 இல் தான் அது ஐரோப்பாவில் பழக்கத்துக்கு வந்தது.

அப்போதெல்லாம் தேயிலை உற்பத்தி அதிகமாக இல்லை. அதனால் தேநீர் என்பது வசதியானவர்களின் வீட்டில் மட்டும்தான் கிடைக்கும். இன்றைக்கு தண்ணீருக்கு அடுத்ததாக உலகம் முழுவதும் அதிகமாகப் பருகப்படும் பானம் தேநீர்தான்.

ஒரு காலத்தில் ரஷ்யாவின் தெருவில் தேநீர் வண்டி வருகிறது என்றால் மக்கள் ஓடி வந்து கூடி விடுவார்களாம். அந்தக் காலத்தில் எல்லாம் அவுஸ்திரேலியாவில் ஒரு பழக்கம் உண்டு.

அதாவது காலையில் வேலைக்குப் போகமுன் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் சில தேயிலைகளைப் போட்டு விட்டு பேய்விடுவார்களாம்.

மாலையில் திரும்பிவந்து அதை எடுத்து பருகுவார்களாம். தேநீர் ஐரோப்பாவில் பழக்கத்துக்கு வந்ததும் ஒரு பிரெஞ்சு அறிஞன், ''இது இந்த நூற்றாண்டை ஆளவந்திருக்கும் புது எஜமான்'' என்றானாம்.

1650 இல்தான் பிரித்தானியர்களுக்கு தேநீர் பழக்கத்துக்கு வந்தது.

அமெரிக்காவிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது யார் என்று நினைக்கிறீர்கள்?

தேநீர் தான். அது எப்படித் தெரியுமா?

''பாஸ்டன் ரீ பார்ட்டி'' என்ற வார்த்தை அங்கு மிகவும் பிரபலம்.

திடீரென தேயிலைக்கான வரியை அதிகரித்து 342 பெட்டி தேயிலையை அமெரிக்காவிற்கு அனுப்பியது இங்கிலாந்து. தேயிலை மீதான வரியை பொறுக்காத அமெரிக்கர்கள் 1773 டிசெம்பர் 16 ஆம் திகதி பிரிட்டிஸ் கப்பலில் இருந்த 342 தேயிலைப் பெட்டிகளையும் தூக்கி பாஸ்டன் ஹார்பர் துறைமுக கடலில் வீசி விட்டார்கள்.

காலனி விடுதலைப்போருக்கு இதுதான் ஆரம்பம்.

இப்படித் தேநீரைப்பற்றி சுவையான செய்திகள் பல உண்டு. இந்தக் காலத்தில் யாருடைய வீட்டுக்குப் போனாலும் உடனே கிடைப்பது தேநீர். அதற்காகவே நண்பர்களின் வீட்டுக்கு போகிறவர்கள் உண்டு.

ஒருத்தர் தனது நண்பருடைய வீட்டுக்குப் போயிருந்தார். உடனே அவர் ஒரு பெரிய கோப்பையில் இவருக்கு தேநீர் கொடுத்தார். அதை இவர் வாங்கிக் குடித்தார்.

அவ்வளவுதான் அங்கே கட்டியிருந்த நாய் குரைக்க ஆரம்பித்து விட்டது.

''உங்களுடைய நாய் ஏன் குரைக்கிறது?'' என்று கேட்டார் இவர்.

இதற்கு அவர் சொன்னார்.

''இந்த நாய்க்குட்டி எப்பொழுதும் இப்படித்தான். தன்னுடைய பாத்திரத்தில் வேறு யார் எதைக் குடித்தாலும் இப்படித்தான் குரைக்குது?'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12,262 குடும்பங்களுக்கு இதுவரையில் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

**(முல்லைத்தீவு)**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி நிவாரணம் இரு வருடங்கள் கட ந்தும் 12 ஆயிரத்து 262 குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.**





வறுமையைத் தணிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமே சமுர்த்தி திட்டம் ஆகும்.

அந்தவகையில்முல்லைத்தீவு மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 412 குடும்பங்களுக்கும் புதுக்குடியிருப்பு செயலர் பிரிவில் ஆயிரத்து 441 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 593 குடும்பங்களுக்கும் துணுக்காய் பிரதேச செயலர்பிரிவில் ஆயிரத்து 571 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 950 குடும்பங்களுக்கும் மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 70 குடும்பங்களுக்கும் சேர்த்து மொத்தமாக 11 ஆயிரத்து 37 குடும்பங்களுக்கு மாதாமாதம் வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற்று வருகிறது.

இந்நிலையில் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு இரு வருடங்கள் கடந்தும் இன்னும் 12 ஆயிரத்து 262 குடும்பங்களுக்கு குறித்த நிவாரணம் வழங்கப்படவில்லை.

அந்தவகையில் கரைதுறைப்பற்றில் 3 ஆயிரத்து 748 குடும்பங்களுக்கும் புதுக்குடியிருப்பில் 6 ஆயிரத்து 365 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டானில் ஆயிரத்து 188 குடும்பங்களுக்கும் துணுக்காயில் 400குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கில் 541 குடும்பங்களுக்கும் மணலாறு (வெலிஓயா) 20 குடும்பங்களுக்குமாக சேர்த்து சமுர்த்தி பயனாளிகள் பட்டியலில் இணைக்கப்பட்டும் இது வரை அவர்களுக்கான சமுர்த்தி நிவாரணம் வழங்காதது ஏன் என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

தற்போது 11 ஆயிரத்து 37 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகிறது.

இவற்றைவிட 12 ஆயிரத்து 262 குடும்பங்கள் வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

எனவே அக்குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கி வறுமையில் இருந்து மீளஉதவுமாறு முல்லை. அரச அதிபரை பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர். (2-267)




# மக்களின் குடிநீர் தேவைக்காக பொதுக்கிணறுகள் ஆழப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது

## துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

(மல்லாவி)
அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தற்போதைய வறட்சி நிலையினை கருத்திற் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

வன்னியில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக துணுக்காய் பிர தேச செயலர் பிரிவில் உள்ள பல கிணறுகளும், நீர்ப்பாசன குளங்களும், நீரின்றி வறண்டு போயுள்ளன.

இதனால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தினை முன்னேற்ற வழியின்றி இருக்கின்ற நிலையில், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் துணுக்காய் பிரதே ச செயலர் பிரிவில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 250 பேருக்கு தலா 500 ரூபாவிற்கு மேற்பட்ட உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை 750 குடும்பங்களுக்கு 10 நாட்களுக்கு இலகு வேலை செய்வதன் ஊடாக ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குடி தண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள 50 பொதுக்கிணறுகள், ஆழப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த அமைச்சின் 25 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் நடைபெற்று வருகிறது.

மேலும் இவ்வமைச்சின் ஊடாக அம்பளப்பெருமாள் குளம், புகழேந்திநகர் ஆகிய இடங்களில் புதிதாக பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மிள்குடியேற்றத் திட்டத்தின் ஊடாக உயிலங்குளம் கிராமத்தில் புதிதாக பொதுக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஐயங்கன் குளத்திலுள்ள மக்களின் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடனும் மற்றும் இக்கிராமங்களிலுள்ள குடிநீர் கிணறுகளுக்கு நீரினை சேகரிக்கும் முகமாகவும் மேற்படி குளத்திலுள்ள சேறுகள் அகற்றப்பட்டு ஆழப்படுத்தும் நடவடிக்கை குறித்த அமைச்சின் 60 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கூட்டமைப்பு எம்.பியின் நிதியொதுக்கீட்டில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(மல்லாவி)
முல்லை.மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபையூடாக மக்கள் நலன்சார்ந்த பல்வேறுவேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் தனக்கு ஒதுக்கப்பட்டதிலிருந்து 7 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவை த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஒதுக்கீடு செய்துள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் நிதியொதுக்கீட்டின் மூலம் பனங்காமம் மூன்றுமுறிப்பிலுள்ள அம்மன் ஆலய வளாகத்தில் மலசலகூடம் அமைப்பதற்காக 75 ஆயிரம் ரூபாவும் நெட்டாங்கண்டல் மேற்கு முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் மலசலகூடம் அமைப்பதற்காக 75 ஆயிரம் ரூபாவும் சிராட்டிகுளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபாவும் கரும்புள்ளியான் கிராம விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவும் பனங்காமம் சிவாலய அபிவிருத்திக்காக 75 ஆயிரம் ரூபாவும் வன்னிவிளாங்குளம் கிராம அபிவிருத்தி சங்க கட்டட வேலைகளுக்காக 60 ஆயிரம் ரூபாவும் நெட்டாங்கண்டல் விநாயகர் ஆலய அபிவிருத்திக்காக 60 ஆயிரம் ரூபாவும் பாண்டியன் குளம் கிராம விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவும் அம்பாள் குளம் விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 25 ஆயிரம் ரூபாவும் பாண்டியன் குளம் ஆரம்ப பாடசாலைக்கு ஒலி பெருக்கி கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (2-15)





கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழாவும் தீர்த்தத்திருவிழாவும் அண்மையில் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி குளத்தில் சுவாமிகள் தீர்த்தமாடி வீதி உலா வருவதையும் பக்தர்கள் பிரதட்டை செய்வதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# ஓய்வூதியக் கொடுப்பனவை நேற்று வங்கிகளில் பெறமுடியாத நிலை

## கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர்கள் கவலை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர்களுக்கான செப்டெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணம் சிலரது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவில்லையென பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வூதியர்களுக்கான செப்டெம்பர் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நேற்றையதினம் வழங்கப்பட வேண்டும். இதனைப்பெற்றுக் கொள் வதற்காக அவர்கள் உரிய வங்கிகளுக்கு சென்ற போது சிலருக்கு மட்டுமே ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணம் கிடைத்துள்ளது.

பலருக்கு இந்த ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணம் உரிய வங்கிக் கணக்குகளில் இருந்து பெறமுடியாத நிலை காணப்பட்டது. இதனால் நீண்ட தூரங்களிலிருந்து செப்டெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப் [illegible] யர்கள் தமது வயோதிப நிலையிலும் அதனைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் நின்றதை காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் கிளிநொச்சியில் உள்ள அரசாங்க வங்கிகளில் இதனை நேர [illegible] அவதானிக்கக் கூடிய [illegible] இருந்தது.

இது உரிய பிரதேச செயலகங்களின் தவறா அல்லது வங்கிகளின் தலைமைப்பீடங்களின் தவறா என பாதிக்கப்பட்ட ஓய் வூதியர்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஏற்கனவே வங்கியூடா கவே எதிர்வரும் காலங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமென அறிவிக்க ப்பட்ட நிலையில் அதனை உரிய முறையில் உரிய காலத்தில் செயற்படுத்தப்படாதது ஏனெனவும் இனி வரும் காலங்களிலாவது மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளை தமது வங்கிக் கணக் குகளில் வைப்பிலிட்டு அதனைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக் கொள்கையை அமுல்படுத்தக்கோரி சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

சட்டக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் நடத்தவேண்டும் என்று அகில இலங்கை சட்ட மாணவர் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

சட்டக்கல்லூரியில் நடத்தப்படும் இறுதி பரீட்சை உள்ளிட்ட மூன்று பரீட்சைகளும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும்.

எனினும், இறுதி பரீட்சையை ஆங்கில மொழியில் மட்டுமே நடத்த வேண்டும் என்று கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்வி சபையினால் ஆலோசனையொன்று அண்மையில் முன்வைக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தே, அகில இலங்கை சட்ட மாணவர் இயக்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதுதான் அரசாங்கத்தின் இரு மொழிக்கொள்கை அமுலாக்கலா? என கோசம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், ஜனாதிபதி செயலகத்தை நோக்கி செல்வதற்கு முயன்ற போதிலும் டெலிகொம் நிறுவனத்துக்கு முன்பாக பொலிஸார், வீதி தடையையே ஏற்படுத்தி பேரணியை தடுத்துநிறுத்தினர்.

சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை 35 வயதுக்கு மேல் இணைத்துக் கொள்ளவேண்டாம் என்று அண்மையில் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் அந்த யோசனை வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தலைமைத்துவ பயிற்சிக்கு மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு

தலைமைத்துவ பயிற்சிக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களை பலவந்தப்படுத்தி தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபடுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இராணுவ ரீதியிலான பயிற்சி முறைமையை எதிர்ப்பதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. கடந்த 7ஆம் திகதி பல்கலைக்கழக மாணவரகளுக்கு தலை மைத்துவ பயிறசி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அநேகமான மாணவர்கள் தலைமைத்துவ பயிற்சியை விரும்புவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தலைமைத்துவ பயிற்சியானது அரசாங்கத்தின் அரசியல் நோக்கங்களை மட்டுமே பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடந்த காலங்களில் கணனி மற்றுமு ஆங்கில பயிற்சி வழங்கப்படும் நேரத்தையே தற்போது தலைமைத்துவ பயிற்சிக்காக ஒதுக் கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தலைமைத்துவ பயிற்சியில் பங்கேற்கும் சில மாணவர்கள் உடல் ரீதியான பாதிப்புக் களையும் எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளது. (இ)

# உள்நாட்டு பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தாதீர்!

## தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கோருகிறார் கோத்தா

(கொழும்பு)

பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்த வேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் கோரியுள்ளார். ஏதேனும் பிரச்சினை இருந்தால் அது குறித்து அரசாங்கத்துடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளார்.

ஏதேனும் சிக்கல்கள், முரண்பாடுகள் காணப்பட்டால் அது குறித்து தன்னார்வ தொண்டு நிறுவன செயலகம் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என தெரிவித்துள்ளார். சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நகர அலங்காரம் போன்ற விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய சமாதானப் பேரவை உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் அண்மையில் நடத்திய சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் 27 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் இடம்பெற்று வரும் நிலையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும் குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் மீது பல குற்றச்சாட்டுகளை அடுக்கவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அலட்டிக்கொள்ளாத நிலையில் அந்நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரடியாக அழைத்து பேசவும் பாதுகாப்புச் செயலாளர் திட்டமிட்டு வருவதாக கொழும்பிலுள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.நா.வின் புதிய ஆணையாளரும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் நவநீதம்பிள்ளையினை பின்பற்றி வருவதாக பொது பல சேனா உள்ளிட்ட சிங்கள கடும் போக்கு அமைப்புக்கள் குற்றம் சாட்டிவரும் நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தன்னார்வத்தொண்டு நிறுவங்களிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜப்பான் பிரதமரையடுத்து சீன ஜனாதிபதியும் வருகை

## உறவைப் பலப்படுத்துமா இலங்கை?

சீன ஜனாதிபதி ஸீ ஜின் பிங்கின இலங்கை விஜயம் தொடர்பிலான திகதிகள் உறுதிப்படுத்தப்படாத நிலையில், தற்போது இலங்கை விஜயத்திற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 16,17ஆம் திகதிகளில் சீன ஜனாதிபதி இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பிற்கு அமைய சீன ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சீனஜனாதிபதியின்இலங்கைவிஜயமானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட் டுள்ளது.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பல புரிந்துணர்வு உடனபடிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 28 ஆண்டுகளில்சீன ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யும்முதல்சந்தர்ப்பம் இதுவாகும்.

சீன ஜனாதிபதி ஜின்பிங், இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். இதேவேளை சீனாவிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜப்பானுக்கு ஆதரவான தீர் மானம் சீனாவிற்கு விரோதமானதாக அமைந்துள்ளது.

வடகொரியாவினால் ஜப்பானியர்கள் கடத்தப் பட்டு வருவதாகவும், இந்த நடவடிக்கையை எதிர்ப்பதாகவும் இலங்கை அறிவித்துள்ளது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஜப்பான் பிரதமர் ஸின்சோ அபேயிடம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதனால், சீனா வுடனான உறவுகளில் முரண் பாட்டு நிலைமை ஏற்படலாம் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது. ஜப்பா க்கு எதிரான வடகொரியாவின் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் நேச நாடான சீனா பூரண ஆதரவளித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

இலங்கையில் பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வரும் சீனா, இலங் கையின் இந்தத் தீர்மானத்தை எவ்வாறு அணுகும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண் டும.

சர்வதேச அரங்கில்வட கொரியாவிற்கு சீனா பூரண ஆதர வளி த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இம்முறை உயிர்ப்பலி இல்லை

(கொழும்பு)

இலங்கையின் முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமானாலும், நீதிமன்ற உத்தரவு காரணமாக பக்தர்கள் கொண்டு வந்த மிருகங்களை பலி கொடுக்க முடியாமல் போயுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், உள்ளூர் பிரதேச சபையின் அனுமதி பெற்றே அங்கு மிருகபலி கொடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் தாங்கள் இந்த அனுமதியைக் கோரவில்லை என்று தலைமை பூசகர் காளிமுத்து சிவ பாதசுந்தரம் தெரிவித்தார்.

இந்து ஆலயங்களில் உயிர்ப்பலி கொடுக்கப்படுவதற்கு தொடர்ந்து எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆலயத்தில் மிருகங்கள் பலி கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி வீரவாகு செல்வநேசம்

கரவெட்டி மத்தி பெரியதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு செல்வநேசம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சந்தியாப்பிள்ளை எலிசபெத்



புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை எலிசபெத்(ஓய்வு பெற்ற ஆசிரியர்- யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை) கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சுங்கிலியன் கந்தன்

கைதடி வடக்கு, வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுங்கிலியன் கந்தன் கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சின்னத்தம்பி சிதம்பரம்



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.88, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று புதன்கிழமை இல.88, உதயநகர் கிளிநொச்சியில் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்கு உதவாத நெய்; விற்பனை செய்தவருக்கு தண்டம்


(யாழ்ப்பாணம்)

காலாவதியான நெய்யினை போத்தலில் அடைத்து விற்பனை செய்து வந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பாளர் தனசேகரன் வசந்தசேகரம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

யாழ். நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் மேற்படி வர்த்தகர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து, குறித்த வர்த்தகரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளையில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து, நீதவான் தண்டம் விதித்ததாக இணைப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலயத்தில் அதிக விலைக்கு குளிர்பானங்கள் விற்ற வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)



நன்றி-மிரர்

# வடக்கு மாகாணத்தில் இந்தியன் வீட்டுத்திட்டத்திலும் ஜனாதிபதி விசேட செயலணி தலையீடு செய்துள்ளது

வடக்கு மகாண மக்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தியன் வீட்டுத்திட்டம் ஜனாதிபதி விசேட செயலணியின் சிபார்சின் அடிப்படையிலேயே வழங்கப்படுவதாக வடக்கு மாகாண சபை குற்றம் சாட்டியுள்ளது. வடக்கு மாகாண சபையின் திட்டமிடல் குழு சரியாக இயங்காமையின் காரணமாகவே வீட்டுத்திட்ட விடயத்தில் ஜனாதிபதி பாதுகாப்பு படைப்பிரிவு தலையிடுவதாக வடக்கு மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் ஜீ.ரி.லிங்கநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 15 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவை செயலகத்தில் நேற்று மு.ப 9.20 மணியளவில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய லிங்கநாதன் முதலமைச்சரிடம் சில வினாக்களை தொடுத்ததோடு மேற்படி குற்றச்சாட்டினையும் முன் வைத் துள்ளார்.

01.10.2013 இல் நடைபெற்ற சபை நடவடிக்கை என்னால் முன் வைக்கப்பட்டு வட பகுதி காணி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கும் 18.02.2014 இல் முன் வைக்கப்பட்ட காணி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கும் இதுவரை தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என நான் கருதுகின்றேன்.

ஏனெனில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரினால் வடமாகாண காணி அமைச்சருக்கு எனக்கு பிரதியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் காணி தொடர்பான அதிகாரம் மாகாணக் காணி அமைச்சருக்கு உண்டு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காணி தொடர்பாக வடமாகாண காணி அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை இது தொடர்பாக பொறுப்புக்களை கையாளுகின்ற அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சரி டம் அறிய விரும்புகின்றேன். 10.12.2013 இல் நிறைவேற்றப்பட்ட இந்தியன் வீட்டுத் திட்டம் தொடர்பாக பிரேரணையில் மாகாணசபை யினூடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை இச்சபையில் அறிய விரும்புகின்றேன்.

நடமாடும் சேவை தொடர்பாக எனது கன்னி உரையிலும் 10.12.2013 என்னால் வவுனியா வடக்கு செட்டிகுளம் பிரதேசங்களில் மாகாண அமைச் சுக்கள் திணைக்களங்களின் நடமாடும் சேவை தொடர்பாக பிரேரணை கொண்டுவரப்பட்டும் இது வரை நடமாடும் சேவை நடைபெறவில்லை இதன் தாமதத்திற்குக் காரணத்தினை முதலமைச்சரிடம் அறிய விரும்புகின்றேன் என தெரிவித்தார். இவற்றுக்கு பதிலளித்த முதலமைச்சர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிற்கு என்னால் அனுப்ப ப்பட்ட கடிதத்திற்கு இதுவரை பதில் தரப்படவில்லை. மேலும் மாகாண சபைக்கு அதிகாரமுண்டு என கூறிக் கொண்டு மாகாண சபையினை வவுனியா அரசாங்க அதிபர் மீறி செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-4)

## சாந்தி ஹோம பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூஜைகள் புரட்டாதி மாதம் பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளது.

சனீஸ்வர ஹோம வழிபாடுகளில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் 200 ரூபா செலுத்தி தங்கள் பெயர், நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)






தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட வருடாந்த போட்டியில் வெற்றி பெற்ற வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சங்கானை பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்தியர்கள் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறியினால் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்ட போது... (படம்:-என்.குமார்)

# திருவுடையாள் மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த வெளியீடான திருவுடையாள்-05 மலர் (பிரதேச மலர்) இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் வெளியிடுவதற்கு மலர்க்குழு தீர்மானித்துள்ளது.

மேற்படி மலரில் பிரதேசப் படைப்பாளிகளின் ஆக்கங்களையும் சேர்த்துக்கொள்ளவிருப்பதால் 5 பக்கங்களுக்கு மிகைப்படாத சிறுகதை குறுநாடகப்பிரதி மற்றும் ஒரு பக்க கவிதை முதலானவற்றை மலர்க்குழு எதிர்பார்க்கின்றது.

தமது ஆக்கங்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகின்ற படைப்பாளிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகைதந்தோ அல்லது 0212263258 எனும் தொலைபேசி இலக்கத்தில் கலாசார உத்தியோகத்தரைதொடர்புகொண்டோ ஆக்கங்களை வழங்கவும் மேலதிக விபரங்களைப் பெறவும் முடியுமென மலர்க்குழு சார்பாக கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ-60)

# யு.எஸ்.எயிட் நிதியுதவியுடன் பல திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எயிட் நிதியுதவியில் யாழ்.சமூக செயற்பாட்டு மையம் மேற்கொண்ட திட்டங்கள் யாழ்.மாவட்டம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெற்றன.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தர்மக்கேணி, கச்சார் வெளி முல்லையடி, கிளாலி, முகமாலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் 63 இலட்சத்து 28 ஆயிரத்து 530 ரூபா செலவில் 65 மலசல கூடங்களும், அல்லிப்பளை, புலோப்பளை, கிளாலி கிராம சேவகர் பிரிவுகளில் 78 இலட்சத்து 35 ஆயிரத்து 360 ரூபா செலவில் வலைகள், பாதுகாப்பு அங்கிகள் உட்பட 15 வள்ளங்கள், 15 வெளி இணைப்பு இயந்திரங்கள் மற்றும் பாதுகாப்பு அங்கிகள் சங்கங்களை வலுப்படுத்தலும் கோயில் வயல் கிராம சேவகர் பிரிவில் 25 இலட்சத்து 56 ஆயிரத்து 168 ரூபா செலவில் வலைகள், பாதுகாப்பு அங்கிகள் உட்பட 12 வள்ளங்கள் மற்றும் சங்கங்களை வலுவூட்டப்படுத்தல் போன்ற திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பொன்னாலை, சுழிபுரம் கிழக்கு, கிராம சேவகர் பிரிவுகளில் 117 இலட்சத்து 35 ஆயிரத்து 625 ரூபா செலவில் 75 அரை நிரந்தர வீடுகளும், 63 இலட்சத்து 47 ஆயிரத்து 340 ரூபா செலவில் 60 மலசலகூடங்களும் 14 இலட்சத்து 59 ஆயிரத்து 990 ரூபா செலவில் ஒரு பொது மண்டபமும் அமைக்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, மாதகல் தெற்கு கிராம சேவகர் பிரிவுகளில் 2 கோடியே 64 இலட்சத்து ஆயிரம் ரூபாய் செலவில் வலைகள், பாதுகாப்பு அங்கிகள் உட்பட 40 வள்ளங்களும் 40 வெளி இணைப்பு இயந்திரங்களும் மற்றும் மீனவ சங்கங்களை வலுப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டன.

மாதகல் மேற்கு, கிராம சேவகர் பிரிவில் 14 இலட்சத்து 59 ஆயிரத்து 990 ரூபா செலவில் ஒரு பொது மண்டபமும், ஆனைக்கோட்டைக் கிராம சேவகர் பிரிவில் (காக்கைதீவு) 35 இலட்சத்து ஆயிரத்து 614 ரூபா செலவில் ஒரு ஏல மண்டபம் என்பன அமையும்.

குறித்த வேலைகள் யாவும் பிரதேச செயலக அதிகாரிகளதும், பயனாளிகளதும் முழுமையான பங்களிப்புடன் நடைபெற்றுள்ளமையினால் 15 அரை நிரந்தர வீடுகளும் 15 மலசல கூடங்களும் மேலதிகமாக நடைபெற்றுள்ளது.

இத் திட்டத்தில் நடைபெற வேண்டியுள்ள வேலைத்திட்டங்களில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதகல் கிழக்கு பிரிவில் 82 இலட்சத்து 36 ஆயிரத்து 598 ரூபா செலவில் 6 ஆயிரத்து 598 ரூபா செலவில் 6 ஆயிரத்து 414 விவசாயிகள் வாய்க்கால் புனரமைப்பும், முள்ளானை பெரிய விளான் கிராம சேவகர் பிரிவுகளில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் திராட்சை செய்கை ஊக்குவிப்பும் முன்னெடுக்கப்பட்டன.

மாதகல் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் 24 இலட்சத்து 70 ஆயிரத்து 857 ரூபா செலவில் மீனவர் இளைப்பாறு மண்டபமும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் 17 இலட்சம் ரூபா செலவில் கிணறு திருத்தம் என்பனவும் முன்னெடுக்கப்பட்ன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் வசாவிளான் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் 14 இலட்சத்து 59 ஆயிரத்து 990 ரூபா செலவில் ஒரு பொது மண்டபமும், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கிராம சேவகர் பிரிவுகளில் 3 இலட்சம் ரூபா செலவில் திராட்சை செய்கை ஊக்குவிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் அம்பன் கிராம சேவகர் பிரிவில் 20 இலட்சத்து 91 ஆயிரத்து 700 ரூபா செலவில் 10 ஏக்கர் மர முந்திரிகை செய்கை போன்ற திட்டங்கள் அமையும்.

மேற்படி வேலைகளில் பளை பிரதேச செயலர் பிரிவில் 75 அரை நிரந்தர வீடுகளும் 60 மலசல கூடங்களும் பூர்த்தியடைந்து கையளிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு காக்கைதீவு ஏல மண்டபமும், மாதகலில் 60 குடும்பங்களுக்கான கடற்றொழில் உபகரணங்களும், பொது மண்டபமும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொன்னாலையில் பொது மண்டபமும் அண்மையில் அமெரிக்கத்தூதரகப் பிரதிநிதிகளால் கையளிக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனதால் ஞானம் கிட்டும்போது வாழ்வில் அமைதியும், பூலோக சொர்க்கமும் ஏற்படும்.
– வால்ட்டேர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மன்னன் திரிசங்கிற்கு விசுவாமித்திரர் இலங்கை அரசுக்கு சுப்பிரமணிய சுவாமி

தமிழின் பெருமை என்பது அதன் சொற் களஞ்சியத்தின் தத்துவப் பொருளில் தங்கியுள்ளது எனலாம். தமிழில் இடம்பெறும் சொற்கள் பல்வகைப் பொருளோடு சம்பந்தப்பட்டவை. சில சொற்கள் கதைகளோடும் மனிதர்களின் பெயர்களோடும் தொடர்புபட்டவை.

அந்த வகையில் **திரிசங்குநிலை** என்று நாம் கூறிக் கொள்ளும் சொல்லின் பின்னணியில் முக்கியமான கதை இருப்பதைப் பலரும் அறிந்திருப்பர்.

திரிசங்குநிலை என்றால் இரண்டும் கெட்டநிலை என்பது பொருள். அங்குமில்லை; இங்குமில்லை என்றும் பொருள் கொள்ளலாம்.

திரிசங்கு என்பது ஒரு மன்னனின் பெயர். பூலோகத்தில் அரசாட்சி புரிந்து வந்த திரிசங்கு மன்னனுக்கு நீண்டநாளாக ஓர் ஆசை.

பொதுவில் சொர்க்கம் என்பது ஆன்மாவுக்கானது. உயிர் பிரிந்து போக, உடல் பூலோகத்தில் சடலம் என்ற பெயரோடு தகனமாகிக் கொள்ளும்.

உயிர் மட்டுமே சொர்க்கம் அல்லது நரகத்தை சென்றடைகின்றது.

ஆனால் மன்னன் திரிசங்கு தன் உடலோடும் உயிரோடும் சொர்க்கத்தை அடையவிரும்பினான். அதற்காக வசிட்டமுனிவரை அணுகி,' சுவாமி! இந்த உடலோடு நான் சொர்க்கத்திற்குச் செல்லவேண்டும் என்று வேண்டினான். அதற்கு வசிட்டமுனி மன்னா! இது நிறைவேறாத ஆசை. இதைக் கைவிட்டுவிடு. பூலோகத்தில் பிறந்தவர்கள் உடலோடு சொர்க்கம் செல்லமுடியாது என்றார்.

மன்னன் திரிசங்கு வசிட்டமுனிவரின் பதிலை ஏற்பதாக இல்லை. தொடர்ந்து விசுவாமித்திரரைச் சந்தித்தான். சுவாமி! நான் எனது உடலோடு சொர்க்கம் செல்ல வேண்டும். வசிட்டமுனிவர் இது சாத்தியமில்லை என்று கூறிவிட்டார். நீங்கள்தான் இதற்கு உதவவேண்டும் என்று மன்றாடினான்.

வசிட்டரும் விசுவாமித்திரரும் போட்டி மனம்கொண்டவர்கள். எனவே வசிட்டரால் முடியாததை தான் செய்ய வேண்டும் என்று விசுவாமித்திரர் நினைத்தார். மன்னன் திரிசங்குவை நோக்கி, மன்னா! என் தவ வலிமையால் உன்னை உன் உடம்போடு சொர்க்கத்திற்கு அனுப்புகிறேன் என்று உறுதி வழங்கினார்.

காலநேரம் வந்தபோது விசுவாமித்திரர் தன் தவவலிமையால் மன்னன் திரிசங்குவை அவனின் உடலோடு சொர்க்கத்திற்குச் செல்ல ஏவுகிறார். மன்னன் திரிசங்குவும் பூலோகத்தில் இருந்து வானுலகை நோக்கிச் செல்கிறான்.

மானிடன் ஒருவன் தன் மனித உடம்போடு சொர்க்கத்தை நோக்கி வருவதை அறிந்த தேவலோகத்து அரசனாகிய தெய்வேந்திரன் கடும் கோபம் கொண்டான். சொர்க்க வாசலை நெருங்கும் வேளை மன்னன் திரிசங்குவை தன் ஆயுதத்தால் ஒரே அடிஅடித்தான். அவ்வளவுதான் திரிசங்கு, சொர்க்க வாசலில் இருந்து பூலோகத்தை நோக்கி விழுந்து கொண்டிருக்கிறான்.

இதை அறிந்த விசுவாமித்திரர், திரிசங்கு மன்னன் பூலோகத்தை வந்தடைந்தால் தனக்கு அவமானம் என்று கருதி அவனை சொர்க்கலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையில் தடுத்து நிறுத்தினார்.

இப்போது மன்னன் திரிசங்கு பூமியிலுமில்லை. சொர்க்கத்திலுமில்லை. இரண்டும் கெட்டநிலையில் இடைநடுவில் நிற்கிறான். இதைத்தான் **திரிசங்கு நிலை** என்றனர்.

இந்த நிலை இலங்கை அரசுக்கும் வரக்கூடிய வாய்ப்பு உண்டு. அதனாலேயே இந்தக் கதையை இங்கு கூறினோம். ஆம்; மன்னன் திரிசங்கு விசுவாமித்திரரை நம்பியது போல, இலங்கை அரசு சுப்பிரமணிய சுவாமியை நம்பினால், நிலைமை இதுதான். இந்தியாவும் காப்பாற்றாது. சர்வதேசமும் ஏற்காது.

தமிழில் இருக்கக் கூடிய **திரிசங்குநிலை** என்ற சொல்லின் பொருளை இலங்கையின் ஆட்சித் தரப்புக்கு யாராவது எடுத்தக் கூறினால் நன்மை பயக்கும்.

# ஆயுதப் போராட்டமானது அநாவசிய போராட்டமாம்

## கருணாவின் விளக்கம்!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருந்திருக்கவில்லை.

ஆனால், வடபகுதியில் உள்ளவர்களின் பிரச்சினைகளுக்காக தாங்கள் அங்கு சென்று போராடியதாக மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

இந்த அநாவசியப் போராட்டத்தால் கிழக்கு மாகாணத்திலிருந்த தமது உறவுகளான 9 ஆயிரம் போராளிகளை இழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனையிறவு மற்றும் ஜயசிக்குறு சமரில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிழக்கு மாகாணப் போராளிகள் பலியாகினர். இழந்த உறவுகள் விலை மதிப்பிடமுடியாத சொத்துக்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதி அரசியல் தலைவர்கள் இங்கு வந்து எதனையும் கூறத் தேவையில்லை. அவர்களின் பின்னால் நீங்கள் செல்லவேண்டிய அவசியமும் இல்லை.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் காரணமாகவே இன்று உங்கள் பிள்ளைகள் எதுவித அச்சமுமின்றி எங்கும் சென்றுவர முடிகின்றது.

நாங்கள் எதுவித அச்சமும் அற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றோம். இந்த யுத்தம் தொடர்ந்து நடைபெற்றிருந்தால், இந்த மட்டக்களப்பு மாவட்டத தமிழர்களின் நிலை கேள்விக்குறியாக இருந்திருக்கும்.

நானும் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டு போராட்டத்துக்கு சென்றவன். ஆயுதப் போராட்டம் முதல் இராஜதந்திர போராட்டம்வரை பங்குகொண்டவன். நாங்கள் சில விட்டுக்கொடுப்புகளை செய்யும்போதே எமது பலம் பெருகுமென அன்று தெரிவித்தபோது என்னை துரோகியாக்கினர்.

அதைப் பற்றி நான் கவலையடையவில்லை. எமது மக்களை காப்பாறவே நான் போராட்டத்துக்கு சென்றேன். போருக்குள் சிக்குண்ட மக்களை காப்பாற்றுவதற்காகவே நான் ஜனநாயக ரீதியில் செயற்படத் தீர்மானித்து போராட்டத்திலிருந்து விலகி வந்து, எமது மக்களுக்கு என்னால் முடிந்த பணிகளை செய்து வருகின்றேன்.

நான் அன்று இருந்தது போன்றே இன்றும் உள்ளேன். எனது காலத்தில் எமது மக்கள் சகல உரிமையும் படைத்த மக்களாக வாழவேண்டும். கடந்த 30 வருடகால போராட்டம் எமது மாவட்டத்தை பாரிய பின்னடைவுக்கு கொண்டு சென்றுள்ளது. அதை நாங்கள் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இன்று பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாங்கள் எமது மக்களை சகல வழிகளிலும் அபிவிருத்தியடைய செய்ய வேண்டும். மிக முக்கியமாக எமது கல்வி நிலை இன்று பாரிய பின்னடைவில் உள்ளது.

அதைக் கட்டியெழுப்ப என்ன வழிகள் உள்ளது என்பதை நாங்கள் சிந்திக்கவேண்டும். இந்த நிலை தொடர்ந்து செல்லுமாயின் தமிழர்களின் பகுதிகளிலுள்ள அலுவலகங்களில் உயர் பதவிகளுக்கு மாற்று இனங்களைச் சேர்ந்தவர்கள் வந்து கடமை செய்யக் கூடிய நிலையேற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முதலைக்குடாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் பொது விளையாட்டு மைதான புனரமைப்பு வேலை நேற்றுமுன்தினம செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஐக்கிய நாடுகளின் படையில் இலங்கை விமானப் படையும்

இலங்கை விமானப்படையின் சில விமான பிரிவுகளை, மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் தென்சூடானின் ஐக்கிய நாடுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முதலாவது பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரிவில், எம்.ஐ.17 ரக உலங்கு வானூர்திகள் மூன்றுடன் விமானிகள் 17 பேரும் 107 விமான படை வீரர்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். (இ)

# சங்காபிஷேகமும் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை மூன்றாம் பனை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ இறுதிநாளான இன்று வியாழக்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதேவேளை இரவு பூந்தண்டிகை உற்சவத்தின் போது இரவு 7 மணிக்கு வட்டு.மூன்றாம்பனை இந்து வாலிபர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற சிறப்பு நிகழ்ச்சியாக நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் **மாங்கனி பெற்ற மங்கை** 'என்னும் பொருள் பற்றிய இசைச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்/வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயுகர் தேவஸ்தானத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (இ

# சுவாமிக்கு அழைப்பாணை நீதிமன்று அனுப்பியுள்ளது

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள பாரதிய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமியை ஒக்டோபர் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தமிழ்நாடு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளது.

தமிழக மீனவர் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காமல், கடிதம் மட்டும் எழுதுவதாக தமிழக முதலமைச்சரை விமர்சித்து ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு சுப்பிரமணியன் சுவாமி பேட்டி அளித்திருந்தார்.


இதனையடுத்து, ஜெயலலிதா, சுப்ரமணியனுக்கு எதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரணைக்கு எடுத்து கொண்ட போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது. (இ)



## சத்திய தரிசனம்

### மகிழ்வுடன் கொண்டாடுங்கள்

- விருப்பு வெறுப்பின்றி அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். ஏழை எளியவர்க்கு சேவை செய்யுங்கள்.
- புகழ், பணம் இவற்றுக்கு ஆசைப்பட்டு உங்களுடைய நேர்மையை துறக்காதீர்கள்.
- கடந்த காலத்தில் நடந்ததையே எண்ணிக் கொண்டு மனச்சுமையுடன் வாழாதீர்கள்.
- தொழிலில் புத்துணர்ச்சியுடன் ஈடுபடுங்கள். கிடைக்கும் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.
- பொறாமையால் மனம் புழுங்காதீர்கள். தீமையைக் கண்டால் விலகுங்கள். நல்லவர்களின் சேர்க்கையை நாடுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அன்றாட வாழ்க்கை முறைகள்

- செப்புப் பாத்திரத்தில் தண்ணீரை வைத்தால் அதன் சத்துவகுணம் அதிகரிக்கின்றது.
- வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பியவுடன் கை கால்களைக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளவேண்டும்.
- ஏழைகளுக்கு பாய், படுக்கை, தலையணை தானம் செய்தால் நாம் படுக்கையில் கிடந்து வாடி உயிர்போகும் நிலை ஏற்படாது.
- அளவுக்கு மிஞ்சிய தூக்கம், மயக்கம், தேவையில்லாத பயம், ஆத்திரம் சோம்பல் எதையும் தாமதமாகச் செய்தல். இவையனைத்தும் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள். எனவே இவற்றை நீக்கவேண்டும்.
- நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் புதுப்புது விடயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் மாரின் சிலிச் சம்பியன்



அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் குரேசிய வீரர் மாரின் சிலிச், ஜப்பான் வீரர் நிஷிகோரியை நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்க ஓபன் பட்டம் வெல்லும் முதல் ஆசிய டென்னிஸ் வீரர் என்ற சாதனையை ஜப்பான் வீரர் நிஷிகோரி நிகழ்த்துவார் என்று அனைவரும் எதிர் பார்த்தனர். ஆனால் அவரோ 1 மணி 54 நிமிட ஆட்டத்தில் 6-3, 6-3, 6-3 என்ற நேர் செட்களில் தோல்வி அடைந்தார்.

கோரான் இவானிசவிச் என்ற ஒரு அபாரமான குரேசிய வீரர் அப்போது சாம்ப்ராஸ், அகாஸி உள்ளிட்ட பெரிய வீரர்களுக்கு இணையாக, சில சமயங்களில் அவர்களுக்கு அச்சுறுத்தலையும் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்தான் இப்போது மாரின் சிலிச்சின் பயிற்சியாளர் ஆவார். இவானிசவிச் போலவே சிலிச்சும் பெரிய பெரிய சர்வ்களை அடிப்பதில் நிபுணர்.

2001ஆம் ஆண்டு தனது குரு விம்பிள்டனில் வென்ற பிறகு இப்போது கிராண்ட் ஸலாம் பட்டம் வெல்லும் குரேசிய வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார் சிலிச்.

2005ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டிக்குப் பின்னர் இப்போதுதான் 3 நட்சத்திர வீரர்களில் ஒருவர் கூட இடம் பெறாத ஒரு இறுதிப் போட்டி நடைபெற்றுள்ளது. ஜோகோவிச், நடால், பெடரர் ஆகியோர் இடம்பெறாத இறுதிப் போட்டியாக இது அமைந்தது.

இந்த இறுதிப் போட்டி இரு வீரர்களுக்குமே முதல் கிராண்ட் ஸ்லாம் இறுதிப் போட்டி. ஆனால் நிஷிகோரி பதற்றமடைந்தார். சிலிச் அநாயசமாக ஆடினார்.

சர்வில் பெரிய நிபுணரான சிலிச் 17 ஏஸ் சர்வ்களை அடித்தார். நிஷிகோரியால் அத்தகைய சர்வ்களை 2 தான் அடிக்க முடிந்தது.

9 முறை மாரின் சிலிச் சர்வை பிரேக் செய்ய வாய்ப்பு கிடைத்தும் நிஷிகோரி ஒரேயொரு முறைதான் உடைத்தார். மாறாக சிலில் 11 முறை கிடைத்த பிரேக் வாய்ப்புகளில் 5ஐ வெற்றிகரமாகச் சாதகமாக்கினார்.

நிஷிகோரி இந்த இறுதிப் போட்டிக்கு முன்பு 3 டாப்-10 வீரர்களை வீழ்த்திவிட்டு வந்திருக்கிறார். அதில் இரண்டு முறை 5 செட்கள் ஆடியதால் அவரது ஆற்றல் சற்றே குறைவாகக் காணப்பட்டது. மாரின் சிலிச் வெற்றி பற்றி கூறுகையில், தனது பயிற்சியாளர் கோரான் இவானிசவிச் மீது பாராட்டுதலைக் கொட்டினார். (க)

விளையாட்டுச் செய்திகள்

## யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் காற்பந்தாட்டம்; பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி முகாம்



யாழ். மாவட்ட சிறுவர் காற்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட காற்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த பயிற்சி முகாம் நடைபெறுகின்றது.

சிங்கப்பூரில் இருந்து வருகை தந்த பீபா அமைப்பின் உறுப்பினர் வின்சன் சுப்பிரமணியம் கருத்துரைகளையும் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார்.

இந்த பயிற்சி முகாமில் சிறுவர்களுக்கு காற்பந்தாட்ட பயிற்சிகளை வழங்கி எவ்வாறு காற்பந்தாட்ட விளையாட்டில் ஊக்கப்படுத்தலாம் என்பது தொடர்பான கருத்துரைகள் வின்சன் சுப்பிரமணியத்தால் வழங்கப்பட்டது.

மேலும் காற்பந்தாட்ட உத்திகள் மற்றும் வீரர்கள் போட்டிகளுக்கு தங்களை எவ்வாறு தயார்ப்படுத்துதல் என்பன போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. (க)

## சென்.ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கு ஒரு வருட காலத்திற்கு தடை உத்தரவு

### காற்பந்தாட்ட லீக் அறிவிப்பு



யாழ்ப்பாணம், அராலி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் வைத்து கடந்த மாதம் 24ஆம் திகதி மத்தியஸ்தர் மற்றும் போட்டி ஏற்பாட்டாளர்களை தாக்கிய, அராலி துணவி சென். ஸ்டார் விளையாட்டுக் கழக அணிக்கு ஒரு வருடகால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் காற்பந்தாட்ட் லீக் நிர்வாகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது. அத்துடன் 75 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளதாக லீக் அறிவித்துள்ளது.

லீக் நிர்வாக சபை கூட்டத்தில் மேற்படி தீர்மானங்கள் எடுககப்பட்டு, அராலி துணவி சென்.ஸ்டார் விளையாட்டுக் கழக அணிக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

"அராலி பாரதி விளையாட்டு கழகம், அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியை தனது விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தியது.

ஓகஸ்ட் 24 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில், அராலி துணவி சென். ஸ்டார் அணியும் சென். தோமஸ் அணியும் மோதின.

இதில் சென்.தோமஸ் அணி வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில் போட்டி முடிவடைந்ததும், அராலி துணவி சென் ஸ்டார் அணி வீரர்கள் மத்தியஸ்தரை தாக்கியதுடன், அதனை தடுக்க சென்ற போட்டி ஏற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து, வட்டுக் கோட்டை பொலிஸார் மைதானத்துக்குள் நுழைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து போட்டி ஏற்பாட்டாளர்களால், வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கிற்கு இது தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, தடை மற்றும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வங்கப் புலியை வென்றது கரீபியன்ஸ்

பங்களாதேஷ், மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 10 விக்கெட்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்களை இழந்து 487 ஓட்டங்களைப் பெற்று தமது துடுப்பாட்டத்தை நிறுத்தியது. இதில் க்ரைக் பிரத்வைட் 212 ஓட்டங்களையும், சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களையும், கிறிஸ் கெயில் 64 ஓட்டங்களையும், டரன் ப்ராவோ 62 ஓட்டங்களையும் பெற்றனர். பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் டைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 182 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து இரண்டாவது இன்னிங்சையும் தொடர்ந்து துடுப்பாடியது. முதல் இன்னிங்சில் முஸ்பிகுர் ரஹீம் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், மொமியுல் ஹக் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுலைமான் பென் 5 விக்கெட்களையும், ஜெர்மைன் பிளக்வூட் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இரண்டாம் இன்னிங்சில் பங்களாதேஷ் அணி 314 ஓட்டங்களைப பெற்று இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பியது. முஸ்பிகுர் ரஹீம் 116 ஓட்டங்களையும், மஹமதுல்லா 66 ஓட்டங்களையும், தமீம் இக்பால் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கெமர் ரோச் 4 விக்கெட்களையும், சனூன





கப்ரியல், சுலைமான் பென் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

13 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை விக்கெட் இழப்புகள் இன்றி மேற்கிந்திய தீவுகள் அணி பெற்று வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணியின் க்ரைக் பிரத்வைட் தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் அடங்கிய தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 1 இற்கு 0 என முன்னிலை பெற்றுள்ளது. (க)

று போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் அனைத்து பிராந்திய நாடுகளினது மக்களும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

சர்வதேச விவகாரங்களில் வெளிப்படைத்தன்மை காணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அபிவிருத்திக்கான உரிமை உறுதி செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர்.

உலகின் எல்லா நாடுகளும் ஒரே விதமாக நோக்கப்பட வேண்டுமெனவும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

அணுவாயுதங்களின் மூலம் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பிலும் இலங்கைப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அணுவாயுதங்கள் மூலம் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அணுவாயுத ஒழிப்பிற்காக இலங்கை குரல் கொடுப்பதாக பிரதிநிதிகள் அமர்வுகளின் போது சுட்டிக் காட்டியுள்ளனர். (எ-11)

## சிங்கள...

வித்துள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் சர்வதேச அழுத்தங்களினால் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. அரசு இவ்வாறான அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதும் இல்லை. சிங்கள மக்களின் ஆதரவுடனேயே தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற முடியும். பெரும்பாலான சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதை ஆதரிக்கின்றனர் என்றார். (எ-11)

## ஒரே இரவில் 10 கடைகள்...

ளன. குறித்த கடைகளின்பின் கதவுகள் உடைக்கப்பட்டே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வர்த்தகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொதுச் சந்தை கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்டதாகும்.

இங்கு 369 வர்த்தக நிலையங்கள் இருக்கின்ற போதும் இரண்டு காவலாளிகள் மாத்திரமே இச் சந்தையில் கடமைபுரிகின்றனர்.

இச் சந்தையை சுற்றியுள்ள வேலியமைக்கப்பட்டு பாதைகளுக்கு இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ளது.

இரவு 8 மணியுடன் அனைத்து வர்த்தகர்களும் தமது கடைகளைப் பூட்டிவிட்டு செல்லவேண்டும். மறுநாள் காலை 5.30 மணிக்கு காவலாளிகளால் கதவுகள திறக்கப்பட்டதன் பின்னரே சந்தையினுள் வர்த்தர்கள் தமது கடைகளைத் திறப்பதற்காக உள்நுழைய முடியும்.

இந்நிலையில் குறித்த சம்பவம் நடந்த போது வழமை போல் வர்த்தக நடவடிக்கைகளை அடுத்து தமது கடைகளை பூட்டிவிட்டு அவர்கள் வீடு சென்றுள்ளனர்.

கடைகளை திறப்பதற்காக நேற்றையதினம் காலை அவ்விடத்திற்கு வந்தபோது கடைகள் உடைத்திருப்பது தெரியவந்துள்ளது.

அதனையடுத்து இது தொடர்பாக வர்த்தகர்களால் சந்தைக் காப்பாளர்கள், கரைச்சி பிரதேச சபைத் தலைவர், கிளிநொச்சி பொலிஸ் நிலையம், இராணுவ அதிகாரிகள் என பலதரபினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் கடைகளைப் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர். இச் சந்தையில் கடந்த மாகாண சபை தேர்தலுக்கு முதல் 19 புடைவை, பான்சி கடைகள் இது போன்று உடைக்கப்பட்டு பொருட்கள் எதுவும் களவாடப்படாது காணப்பட்டது.

இதேபோன்று கடந்த 3-ம் திகதி மரக்கறி கடையொன்றின் முன் கதவை உடைத்து உள்சென்ற திருடர்கள் குபேரனுக்கு போடப்பட்டிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர். இம்மாதம் 5 திகதி பழக் கடை ஒன்றினை உடைத்து 15 ஆயிரம் ரூபாய் பணத்தினை திருடிச் சென்றுள்ளனர்.

இச் சந்தையில் சுற்றுவேலி, மின்சாரம், பாதுகாப்பான இரும்புக் கதவுகள் காவலாளிகள் இருந்தும் ஏன் இவ்வாறு நடந்தது என வர்த்தகர்களால் கேள்வி எழுப்பப்படுகிறது. (எ-2,271)

## பலம்...

பலம்பொருந்திய நாடுகளின் நடவடிக்கைகள் சர்வதேச ஜனநாயக சமத்துவ நெறிமுறைமைகளுக்கு இடையூறாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 27-ம் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்று உரையாற்

## மக்களின் சுதந்திரத்தில்...

ஜேர்மனித் தூதுவரிடம், இங்குள்ள இராணுவம் வெளிப்படையாக செயற்படாமல் தமது புலனாய்வுப்பிரிவினூடாக செயற்பட்டு எமது ஒவ்வொரு அசைவுகளினையும் கண்காணித்து வருவதாக வடக்கு முதலமைச்சர் எடுத்து கூறியிருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் இக்கருத்தினைக் கேட்ட ஜேர்மனித் தூதுவர் ஜஸ்ரின் மொஹார்ட்டும தான் இங்கு நடமாடும் போதும் இராணுவப் புலனாய்வாளர்கள் தன்னையும் பின் தொடர்ந்ததாக முதலமைச்சரிடம் கூறியிருந்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாண சபை தேசிய பாதுகாப்பு விடயங்களில் தலையிடுவதனை நிறுத்திக் கொள்ள வேண்டுமென இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய அறிவிப்பொன்றினை விடுத்திருந்தார்.

இவ் அறிவிப்பு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜேர்மனியத் தூதுவரிடம் நான் கூறியதனை தேசிய பாதுகாப்பு விடயம் என்று கூறிவிட முடியாது.

நாங்கள் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் நடத்திச் செல்வதற்கு தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் பிரச்சினைகளினை தரக் கூடாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தேசியத்தின் பாதுகாப்பிற்கு சுமையாக இருக்கின்றார்கள் என நேரடியாக சொல்லட்டும். அதன் பிறகு இராணுவப் பேச்சாளரின் கருத்திற்கு நான் பதில் கூறுவேன் என்றார் அவர். (எ-4)

## தமிழ்க்...

கேற்க அழைப்பதால் எதுவிதமான பிரயோசனமும் கிடையாது.

மக்கள்விடுதலை முன்னணியை பொறுத்தவரை இலங்கையில் வாழும் அனைத்தின மக்களும் சமத்துவத்துடன் வாழ்வதையே விரும்புகின்றது என்றும் தமது அறிக்கையில் கூறினார். (எ-11)

## பேச்சுவார்த்தை...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனோ கணேசனின் தாயாருடைய மரண வீட்டிற்கு வந்திருந்த கோத்தபாய, என்னுடன் கதைப்பதற்கு தான் தயாராகவிருப்பதாக மனோ கணேசனிடம் தெரிவித்திருந்தார். மாறாக தூதுவிடவில்லை.

அத்துடன், கோத்தபாய ராஜபக்ஷவிடம் இருந்து எவ்வித அழைப்புக்களும் எனக்கு நேரடியாக வரவில்லை. அவ்வாறு அழைப்பு வந்தால் எனது கட்சியின் தலைமையுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பேன் என முதலமைச்சர் தெரிவித்தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை...

தொகையை விடவும இவ்வாண்டில் 1000 மாணவர்கள் அதிகப்படியாக உள்வாங்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டில்நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாண வர்களை அந்தந்த கற்கைத் துறைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டன.

மாவட்ட மட்டத்திலான, தேசிய மட்டத்திலான புள்ளிகளின அடிப்படையில்கற்கை நெறிகளைத் தொடர்வதற்காக மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படவுளளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பல்கலைக் கழகங்களுககுத் தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் முதற்கட்ட பயிற்சி நடவடிக்கைகள் கடந்த 7ஆம் திகதி ஆரம்பித்துள்ளது.

7ஆம்திகதிமுதல 27ஆம் திகதி வரை இந்த முதல் கட்டப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இரண்டாம் கட்டப பயிற்சிகள் ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையும், மூன்றாம் கட்டப் பயிற்சிகள் ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில்23,500 மாணவர்கள் பங்குகொள்வர்.

உயர்கல்விஅமைச்சினால் மேற்கொள்ளப்படும் இந்த தலைமைத்துவப் பயிற்சிகளுக்கு பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சின ஒத்துழைப்பும் வழங்கப்படுவது குறிப்பிடதக்கதாகும். (எ-11)

## சிங்கள...

இந்தியாவின்அனு 'சரணை தேவையே தவிர வேறெந்த நாட்டினதும் அழுத்தங்களால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அறவழிப் போராட்டத்தை மேற்கொள்ள வுள்ளனர் என்றும் சர்வதேசத்தின் அழுத்தத்துடன் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப் போகின்றனர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரி

19 ஆம் பக்கம் பார்க்க....


கிளிநொச்சியிலும் சாதனையாளர்களை உருவாக்கும் ESOFT METRO COLLEGE

தகவல் தொழில்நுட்பத்துறையில் 2013 /2014 ஆண்டிற்கான
தங்கப்பதக்கத்தினை
பெற்றுக்கொண்ட கிளிநொச்சி ESOFT மாணவர்கள்




இறுதியாண்டிற்கான தங்கப்பதக்கத்தினைப் பெற்ற மாணவன் கூறுகையில் ;

எனது சாதாரணதரத்தின் பின்னர் தகவல்தொழில்நுட்பம் கற்றுக்கொள்ள ஆவல் கொண்டு ஈசொப்ற் நிறுவனத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு சரியான வழிகாட்டல் கிடைத்தது. அதன்மூலம்"Diploma in Information Technology "என்ற உலக்கத்தரம் வாய்ந்த கற்கை நெறியினைத் தெரிவுசெய்தேன். முதுமாணி, இளமாணி தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் மூலம் கற்றுகொண்டதுடன், அவர்களது வழிகாட்டலோடு இணையத்தள வடிவமைப்பு, மற்றும் ஆங்கிலக் கற்கையினையும் தொடர்ந்தேன். தற்போது உயர்தரக்கல்வியில் "Technology" இனைத் தொடர்வதற்கும், கணனி தொடர்பான அடிப்படை அறிவினை விட அதிகமாக பெற்றுக் கொடுத்த ஈசொப்ற் நிறுவனத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

தற்பொழுது கிளிநொச்சிக் கிளையானது கொழும்பு மற்றும் யாழ் தலைமைக் காரியாலயத்தின் நேரடி வழிகாட்டலின் கீழ் இயங்கி வருகின்றது

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO COLLEGE
No.01, Kanagapuram Rd, Kilinochchi
Tel: 021 228 5444 | Hotline: 0775588895
(C-8476)
இலங்கையின் முதற்தர கணனி, ஆங்கில, வியாபார முகாமைத்துவக் கல்லூரி



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு Full இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136 + நாடுகளில் 1040 + கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். பிரான்ஸ் செல்வோர் பதிவு செய்யுங்கள்...

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → ஆலயம் ✝ → AF அல்லது ஆரியகுளத்திலிருந்து றக்கா றோட் → AF



வவுனியா மற்றும் யாழ். நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்
Diploma in Mass Media (அறிவிப்பாளர் பயிற்சி)

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ ... காலம் : 3 மாதம்
Full Time / Part Time Course

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. பயிற்சி நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மழை Fm வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம் !

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச / தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

அனைத்து வகுப்புக்களும் இம் மாதம் ஆரம்பம்

தயாராகுங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடகவியலாளராக வேண்டுமா?
(C-8471)

BTEC
BRITISH TECHNOLOGY& ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna. Tel : 0217904468
Mob : 0777444225
பதிவுகளுக்கு விரையுங்கள்...!




af WORLD MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
LITTLE ASHES
The younger days of Federico Garcia Lorca and Salvadore Dali. (2008, 107 min)
on Thursday 11 September 2014 at 4:00 p.m.
at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone : 0212228093
English language. Free entrance.
(7738)



CIMA

12 வருட கால உன்னத கல்விச் சேவையை வழங்கிவரும் மகத்தான நிறுவனத்தில் CIMA கல்விக்காக இணைந்து உங்கள் கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
13 September 2014 (Saturday)
15 September 2014 (Monday)
நேரம்: காலை 9.00 மணி



" தரம் ஒன்றே எமது தாரக மந்திரம்"

YOUR WISDOM COMPANION
WISDOM
BUSINESS ACADEMY

மேலதிக விபரங்களுக்கு
021 2220727, 021 7200777

Wisdom Business Academy
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தி)
(C-8474)



Obtain a world class UK Qualifications
HND IN
SOFTWARE ENGINEERING
HND IN
BUSINESS MANAGEMENT




New Batches Start on: 14/09/2014

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
071 7775 666

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
E-Mail :info@iis.edu.lk
(C-8469)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org